ஸ்ரீ ராம

17160

17160

ஸ்ரீ நிகமாந்த தேசிகரின்

சில்லரை ரஹஸ்யங்கள்

(முதல் பாகம்)

శ్రీ నిగమాంత దేశికుల చిల్లర రహస్యములు

(మొదటి భాగము)

17160

17160

ACADEMY OF SANSKRIT RESEARCH
MELKOTE
KARNATAKA STATE

M. O. S. Iyengar
30-12-50

Donated to
The Academy of Sanskrit Research
Melkote

by
M. O. S. Iyengar

Accn. No. LT160

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்

அருளிச்செய்த

பதினொரு

சில்லரை ரஹஸ்யங்கள்.

(முதல் பாகம்)

(ஸாரஸாரம் முதலியன.)

Nigar
Chillarai Rahasyangal.
vol. 1.
of Vedanta desika:
(Ed.) Srinivasacharya. A.

A. ஸ்ரீநிவாஸராகவன், M.A.,
மஹாராஜா காலேஜ்
புதுக்கோட்டை.

கும்பகோணம் கவர்ன்மெண்டு வக்கீல் உபயவே
ஸ்ரீநிவாஸய்யங்கார் குமாரத்தி ரங்கம்மாளின்
பூர்ண பொருளுதவியைக் கொண்டு
அச்சிடப்பட்டது.

THE ACADEMY OF SANSKRIT RESEARCH
MELKOTE-571431,
(KARNATAKA STATE)

1937

விலை ரூ. 1—8—0

R672xG68,10-31N37
17160

PRINTED AT THE
Sri Janardana Printing Works, Ltd.,
Town High School Road,
KUMBAKONAM.

விஷய ஸூசிகை.

பக்கம்.

முன்னுரை 4

பாடபேதங்கள் 9

முகவுரை 11

i. ஸ்ரீ தேசிகனின் 32 ரஹஸ்யங்கள் 12

ii. ஸாரஸாரம் முதலியவற்றின் விஷயஸங்கிரஹம் 16

1. ஸாரஸாரம் (பத்தொன்பதாவது ரஹஸ்யம்) 1-78

i. திருமந்திராதிகாரம்: 1–31

மந்திரத்தின் பெருமை-3. ப்ரணவத்தின் அர்த்தம்:-முதல் எழுத்து–6; நடு எழுத்து–10; கடைசி எழுத்து—11; நமஸ்ஸினர்த்தம்—14; நாராயணஶப்தார்த்தம்—20; சதுர்த்தியினர்த்தம்— 25.

ii. த்வயாதிகாரம்: 32—53

அவதாரிகை—32; பூர்வகண்டார்த்தம்:– ஸ்ரீசப்தம்–34; உதாவ:—36; நாராயணசப்தம்—37; சரணம், ஶரணம்—41; ப்ரபத்யே—44; உத்தமன்—46.

உத்தரகண்டம்:— ஸ்ரீமத்ஶப்தம்—49; நாராயணசப்தமும் சதுர்த்தியும்—50; நமஶ்ஶப்தம்—51.

iii. சரமஶ்லோகாதிகாரம்: 53—78.

அவதாரிகை—54; ஸர்வதர்மசப்தார்த்தம்—57; ‘மாம் ஏகம்’—59; சரணம் வ்ரஜ—62; ‘அஹம்’ ஶப்தம்—67; ‘த்வா’—69, ஸர்வபாபேப்ய:—70; ‘மோக்ஷயிஷ்யாமி’–73; ‘மா ஶுச:—75,

2. அபயப்ரதானஸாரம். (இருபதாவது ரஹஸ்யம்.) 79-152

i. ராமாவதார:— 80—82

ii. வாக்யத்வய நிர்ணய:— 82—85.

iii. ஶரணாகதித்வய பூர்வபக்ஷ:— 85—98

தேவர்கள் ஶரணாகதி—86; லக்ஷ்மணனுடையது—86; பரதனுடையது—87; ரிஷிகள் ஶரணாகதி—88; காக ஶரணாகதி—89; ஸுக்ரீவஶரணாகதி—91; ஸமுத்ரஶரணாகதி— 93, ஸீதையின் ஶரணாகதரக்ஷணம்— 93; த்ரிஜடையின் ஶரணாகதி—94; பெருமாளின் சரணாகத ரக்ஷண தர்மம்—96.

iv. ப்ரகரணதாத்பர்ய நிர்ணய:— 98—105

v. ஶரண்யஶீலப்ரகாஶ:— 105—114

vi. ஶரண்யவைபவப்ரகாஶ: 115—117

vii. பாத்ராபாத்ர நிர்ணய: 118—138

கபோதோபாக்யானம்— 118—124

வ்யாக்ர-வானர ஸம்வாதம்— 122—123

கண்டுகாதை— 125—132

நஹுஷ-ப்ருஹஸ்பதி ஸம்வாதம்— 132

ஶிபி-ஶ்யேன-ஸம்வாதம்— 133

viii. ஶரண்யவ்ரதவிஶேஷப்ரகாஶ: 138—142

ix. ஶரண்யஶரணாகதஸம்ரக்ஷணோத்ஸாஹ: 142—151

x. ப்ராப்திப்ரகாரப்ரபஞ்ச: 151—162

தத்வஶிகாமணி. (கிடைக்கவில்லை)

3. ரஹஸ்யஶிகாமணி. (இருபத்திரண்டாவது ரஹஸ்யம்) 163-189

அவதாரிகை— 164

வராஹாவதாரத்தின் ஏற்றம்— 165—166

வராஹபுராணத்தின் ஏற்றம்— 167—169

முதல் ஶ்லோகத்தின் வ்யாக்யானம்— 170—176

இரண்டாவது ஶ்லோக வ்யாக்யானம்-177—184

உபஸம்ஹாரம்— 185

4. அஞ்ஜலிவைபவம். (இருபத்துமூன்றாவது ரஹஸ்யம்) 187-197

5. ப்ரதாநஶதகம். (இருபத்து நான்காவது ரஹஸ்யம்) 198-214

திருமந்த்ரம்— 199—230
த்வயம்— 203—204
சரமஶ்லோகம்— 204—206

6. உபகாரஸங்க்ரஹம். (இருபத்தைந்தாவது ரஹஸ்யம்) 215-236

முதலாவது அதிகாரம்— 215—224
இரண்டாவது அதிகாரம்— 224—228
மூன்றாவது அதிகாரம்— 228—230
'பொய் நின்ற ஞானம்' வ்யாக்யானம்-232—235.

7. ஸாரஸங்க்ரஹம். 237-247

ப்ரமாணங்களின் அகராதிஸூசிகை (**INDEXES.**)

1. ஸம்ஸ்க்ருதப்ரமாணங்கள் i—xx
2. தமிழ் ப்ரமாணங்கள் xxi—xxvii
3. ப்ரமாணஸங்க்ரஹம் i. ஸம்ஸ்க்ருதம் xxviii-xxxi
ii. தமிழ் xxxii
4. பெயர் குறிக்கப்பட்ட க்ரந்தங்கள் xxxiii.
5. ஆகாரம் தெரிய வேண்டிய ச்லோகங்கள் xxxiv—xxxvi.
6. ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
i. ச்லோகங்கள் xxxvi
ii. பாசுரங்கள் xxxvii
7. பெயர்களும், விஷயங்களும் xxxviii

ஸ்ரீ:

முன்னுரை.

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனுடைய ஸாரஸாரம் முதலான பதினொரு ரஹஸ்யங்கள் வெளிவந்து இப்போது பல வருஷங்களாகி விட்டபடியால், அவைகள் துர்லபமாக இருப்பதாலும், பல பெரியோர்களும் இந்த கிரந்தத்தை அவச்யம் பிரசுரிக்க வேண்டும் என்று நியமித்தபடியாலும் இப்போது அவற்றைப் பதிப்பிக்கும் கைங்கர்யத்தில் அந்வயித்திருக்கிறேன். தவிரவும், நாலைந்து வருஷங்களுக்கு முன், ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ. உ. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமி ஸந்நிதியில் சில ஸுஹ்ருத்துக்களோடு அடியேனும் மற்ற கிரந்தங்களைப்போல 'ஸம்பிரதாய பரிசுத்தி' முதலான பதினேழு ரஹஸ்யங்களையும், 'ஸார ஸாரம்' முதலான பதினொரு ரஹஸ்யங்களையும் காலக்ஷேபம் செய்தபோது, ஸ்ரீதேசிகனின் ரஹஸ்ய க்ரந்தங்களுக்கு ஒரு புதிய பதிப்பு மிகவும் அவச்யம் என்பது தோன்றிற்று. ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமியின் திருவுள்ளமும் அப்படியே இருந்தது. ஆகையால் காலக்ஷேப ஸமயத்திலேயே ஸ்ரீ ஸ்வாமி கையில் வைத்திருந்த பரிஷ்க்ருதமான ஓலையேட்டின் சுத்தமான பாடங்களை அனுஸரித்து ஸ்வாமி நியமித்தபடி அவ்வப்போதே இந்த ரஹஸ்யங்களையெல்லாம் சோதித்து வைத்தேன். அவற்றுள் ஸார ஸாரம் முதலான உத்தர ரஹஸ்யங்கள் பதினொன்றையும் பதிப்பிக்கும் பாக்கியம், ஆசார்யர்களுடைய அநுக்ரஹத்தால் இப்போது அடியேனுக்கு எதிர்பாராதபடி கிடைத்திருக்கிறது.

இந்த கிரந்தத்தின் பெருமையையும், இது துர்லபமாயிருப்பதையும் பார்த்து, கும்பகோணம் கவர்ன்மெண்டு வக்கீல் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் குமாரத்தியான ரங்கத்தம்மாள், இதை சுத்தமாகவும் நன்றாகவும் பதிப்பிக்கும்படி அடியேனிடம் சொல்லி அதற்கு வேண்டிய த்ரவ்யம் முழுவதும் தானே கொடுத்து ஸஹாயம் செய்திருக்கிறார்கள். இந்த சிரேஷ்டமான கிரந்தத்தை சோதித்துப் பதிப்பிப்பது என்கிற கைங்கர்யத்தை எனக்குக் கொடுத்து என்னை க்ருதார்த்தனாக்கினதற்கு நான் அவர்கள்

விஷயத்தில் மிகவும் க்ருதஜ்ஞதை யுள்ளவனுயிருக்கிறேன். அவ்விதமே அவர்களுடைய ஆசார்ய பக்தியையும் ஒளதார்யத்தையும் கண்டு ஸ்ரீ வைஷ்ணவ உலகமே அவர்களைக் கொண்டாடுவதோடு, இப்படி நம் ஸம்பிரதாய க்ரந்தம் பரவும்படி செய்த பரமோபகாரத்திற்கு நன்றி பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறது. நம் நாட்டிலுள்ள உதாரர்களான தனிகர்கள் ஜ்ஞான விகாஸ ஹேதுவான பூர்வாசார்ய க்ரந்தங்களை, எல்லோரும் வாங்கி ஸேவிக்கும்பொருட்டு, ப்ரசுரம் செய்யும் விஷயத்தில் இவர்களின் வழியைப் பின்பற்றுவார்களானல், நம் ஸம்பிரதாயம் தழைத்து ஓங்கும் என்பதில் ஸந்தேஹமே யில்லை.

இந்தப் பதிப்பு வெளிவருவதில் ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி செய்தருளின ஸஹாயத்திற்கு அளவே இல்லை. இதில் சிலாகிக்கத்தகுந்த அம்சம் இருக்குமேயானல் அதற்குக் காரணம் ஸ்ரீ ஸ்வாமியே. பிழைகளெல்லாம் அடியேனுடைய அனுபவ மின்மையாலும், ஞானக் குறைவினலும் ஏற்பட்டவையே. அச்சுக்குப் போவதற்கு முன் மாத்ருகைகளை யெல்லாம் சோதித்து, பல பிரமாணங்களுக்கு ஆகரங்கள் தேடிக்கொடுத்ததற்கு மேல், அச்சான பிறகும் ஒரு முறை சோதித்து, *பிறகு கிடைத்த உத்தமமான பாடங்களை எழுதி அனுப்பி இந்த கிரந்தத்தை அழகு பெறச் செய்து, அல்பமான ஞான சக்திகளையுடைய அடியேனுடைய பிரயத்னத்தை ஸபலமாகச் செய்ததற்கு ஸ்ரீ ஸ்வாமியின் திருமுன்பே ப்ரணமங்களோடு இந்த கிரந்தத்தை ஸமர்ப்பிப்பதுதவிர அநந்ய ப்ரயோஜநரான அவர்களுக்கு அடியேன் செய்யக்கூடியது வேறில்லை.

இதைப் பதிப்பிக்கும் விஷயத்தில் உபயோகிக்கப்பட்ட கிரந்தங்கள்:

1. திருக்கோட்டியூர் ஸ்ரீ உ. வே. ஸௌம்யநாராயணசார்ய ஸ்வாமி திருமாளிகையில் அவர்கள் காலக்ஷேபத்தில் உபயோகிக்கும் தாளபத்ர ஸ்ரீ கோசம் (ஓலையேடு). இதுவே ப்ரதானமாகக்கொண்டு மூலத்தில் பாடமாகப் போடப்பட்டிருக்கிறது.

பாடபேதங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

2. சுண்டப்பாளையம் ஸ்ரீ அ. ரா. திருவேங்கடாச்சாரியாரால் 1911-ஞு (விரோதிகிருது-ஞு) பாகவதவர்த்தனி முத்ராக்ஷர சாலையில் பதிப்பிக்கப்பட்டது. இதின் பாடங்கள் 'க' என்று கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

3. கொந்தமூர் ஸ்ரீமத் ராகவாசாரியாரால் பரிஷ்கரிக்கப்பட்டு, திருக்குடந்தை தட்டை கிருஷ்ணமாச்சாரியாரால் (சித்திரபானு-ஞு தை-மீ) (1900) சென்னை கலாநிதி அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. இது 'வ' என்று காட்டப்பட்டுள்ளது.

4. தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டது. இது 'ம' என்று காட்டப்பட்டுள்ளது.

இந்த மூன்றின் (2,3,4,) பாடங்கள் பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருக்கின்றன.

5. திருக்கோட்டியூர் ஸ்ரீ உ. வே. ஸ்ரீராம தேசிகாச்சார் ஸ்வாமி திருமாளிகையிலுள்ள தாளபத்ரகோசம். இதன் பாடங்கள் 'வு' என்று காட்டப்பட்டிருக்கிறன.

6. ஸ்ரீ பவுண்டரீகபுரம் ஸ்வாமியின் ஆச்ரமத்தில் இருந்த ஸ்ரீகோசம் ஒன்று அங்கங்கு ஒத்துப் பார்க்கப்பட்டிருக்கிறது.

7. திருக்கோட்டியூர் ஸ்ரீ ஸ்வாமியிடம் யாம்பாக்கத்திலிருக்கும் மற்றொரு ஏடு.

இவை தவிர தனியாக அச்சிடப்பட்ட ஸாரஸாரமும், அபயப்ரதானஸாரமும், சேட்லூர் ஸ்ரீஉ.வே. நரஸிம்மாச்சார் ஸ்வாமி வ்யாக்யானத்தோடு கூடிய ஹஸ்திகிரி மாஹாத்ம்யமும், பரமபத ஸோபாநமும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

* அச்சானபிறகு ஸ்ரீ ஸ்வாமியிடமிருந்து கிடைத்த பாடங்கள் 'பாடபேதங்கள்' என்ற தலைப்பின் கீழ் இந்த முன்னுரைக்குப் பின் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மேற்கண்ட கிரந்தங்களை யெல்லாம் கொடுத்து உதவின மஹான்களுக்கும், ஸுஹ்ருத்துக்களுக்கும் அடியேனுடைய க்ருதஜ்ஞதை என்றும் உரித்தானது.

இந்தப் பதிப்பில் எழுத்துக்கள் பெரியதாக இருப்பதாலும், மூலத்தில் உதாஹரிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு ஆகரங்களும், அங்கங்கு பாடபேதங்களும் குறிக்கப்பட்டிருப்பதாலும், கிரந்தம் பெரிதாகிவிட்டது. அதனால் ஸாரஸாரம் முதல், ஸார ஸங்கிரஹம் வரையிலுள்ள ரஹஸ்யங்களை முதற்பாகமாக வெளியிட்டு, விரோத பரிஹாரம், முநிவாஹநபோகம் இவற்றோடு ஹஸ்திகிரி மஹாத்ம்யம், பரமபதஸோபானம் இரண்டையும் சேர்த்து இரண்டாம் பாகமாகப் பிரசுரிக்கப் போகிறேன். சில கடின பதங்களுக்குத் தெரிந்தவரையில் அர்த்தங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

ரஹஸ்யங்களில் முன்னும் பின்னுமுள்ள ஸ்ரீதேசிகனுடைய பாசுரங்களுக்கும், ஶ்லோகங்களுக்கும், உதாஹரிக்கப்பட்ட ப்ரமாணங்களுக்கும் அர்த்தம் எழுத முதலில் உத்தேசித்திருந்தது. தாமதத்திற்கும் விரிவுக்கும் அஞ்சி நிறுத்தப்பட்டது. இப்போது அவற்றை ஒரு அநுபந்தமாக வெளியிட நினைத்திருக்கிறேன். ஶரண்யன் மனோரதத்தை பூர்த்திசெய்து வைப்பாராக.

24—11—1937. ஸ்ரீநிவாஸராகவன்.

——:0——

*பாடபேதங்கள்.

பக்கம்.	வரி.	
6	2	இதில் பதங்களை
	7	ப்ரணவாஹிதமான போதும்
	17	மூலமாகிய விதறிந்தவனை
	18	ஸர்வஸாரஸங்கிரஹமாயிருக்குமேகபதமான
7	18	இத்யாதி வர்மநபுராண வசநத்திலும்
10	11	இருப்பாரோடுற்றிலேன்
11	5	உ௩ு ஸுவெொயடெ௩
12	11	ஸுகாரஶாய—ூரயெெவ ஷூஉஹ० [என்கிறபடியே
	19	ஸூதூகூ - தனக்குத் தோன்றும் வஸ்து
14	11	பகவச்சாஸ்த்ரங்களிலே
	19	கீழும் மேலுமுள்ள விரோதிகள்
17	2	ஊாவஸாஜிகளிற்படியன்றிக்கே
	8	வெதநஸாயாஶண௱்
	18	இட்ட்வழக்கு—அதீநம்
18	5	என்று இவனுக்கு— கூ
35	19	இவர்களை உஜ்ஜீவிப்பிக்கைக்காக
38	4	இத்யாதிகளில்படியே புருஷகாரமும்
40	1	செல்வநாரணனென்ற இத்யாதி [விரண்டு
42	14	ஸித்தஸாத்யோபாயங்களிரண்டுக்கும் இவ்
	21	அவிதேயஜ்ஞானத்தாலே மோக்ஷம் சொல்லு
43	1	கை ஸித்தாந்தத்திற்கும், ஸாங்கப்ரபத்தியை.... .... ப்ரமாணங்களுக்கும் விருத்தமாகையாலும்.

* புஸ்தகம் அச்சான பிறகு திருக்கோட்டியூர் ஸ்ரீஸ்வாமிக்கு அனுப்பப்பட்டபோது, இந்த பாடங்களெல்லாம் அவர்களால் தேடி எடுத்து அனுப்பப்பட்டவை. இவை சிறந்தவைகளாக இருப்ப தால் இவற்றை மூலத்தில் கொண்டு, இப்போது மூலத்திலிருப்ப வற்றை பாடபேதங்களாகக் கொள்ளவேண்டும்.—ஸ்ரீ.

48	16	வெருவுரை கேட்டவை கேட்க
49	13	ப்ராப்யனாகச் சொல்லியிருக்க
54	18	பரமபுருஷார்த்தத்திற்கு பரம்பரயா
58	6	தர்மங்களில் தனக்கு
59	6	அவ்வோஹஸாயநங்களினுடைய ஸஹா ஸ்வத்தையும் அவற்றினுடைய காஷ்டைத் தையும்
61	17	இவ்வியாஜோபஶாந்தகாலுஷ்யனை
63	25	[1]தி. மொ. 1. 9. 2. [2]தி. மொ. 1. 9. 1
77	10	ஶிஶுபிநவர்ணம்
81	21	குசலவர்கள் வந்து
85	9	சரண்யமாய் பரமகாரணமான
88	15	திருக்கண்ணமங்கையாண்டான் படியிலே
101	10	நிவேஶயத ஊං என்றது என்னை
109	20	தேவரீர், திருவுள்ளத்தாலே
126	19	கூட்டுகையன்றிக்கே வஞ்சனையுமன்றிக்கே
134	13	தங்களுக்கு சுத்தரானாலும்
137	16	நாதோ ஹ்ருயஷ்ணோ
142	14	பிறப்பிக்கை அழகிதோ
143	13	வேறொரு உபாயமுமின்றிக்கே
144	21	அஹிசொாஜிதஃ - நிருத்தரான
149	23	அல்வழக்குகளெல்லாம் கழிந்து
150	13	(தக ஸ்ரீவவொ நிஶஷ்ய தா)
176	8	பிறக்கிறவன் தனக்கு மற்றும்
196	2	சுக்ஷயஹஶுப்ரஜகவமும்
	6	கூட்டின இவ்வஞ்ஜலி
	26	நிவிருத்தியாலே அறியலாம். ஶாஸ்ரஂசெகவ
197	4	ஶுஂகஜஹ…… இவனுக்கு தோஷமாகாது. 3.
199	26	[2]ஹா. ஶா. 360. 5. [3]நா. வ. 18. 32.
222	1	பண்ணினதுவும்; நம்மையும் "ஶிஷ்யேஷ்ஹ
235	5	ஶேஷவ்ருத்தி விஶேஷரூவமான [ஹம்"
245	10	இது ப்ரஹாணவஶஹம்—ஜ

ஸ்ரீ:

முகவுரை.

"சில்லரை ரஹஸ்யங்கள்" என்கிற இக்கிரந்தத்தைச் செய்தருளின ஸ்ரீ வேங்கடநாதன் என்னும் நிகமாந்தமஹா தேசிகன் நம் ஆசார்யபரம்பரைக்கு சிரோபூஷணம் போன்றவர் என்பது யாவரும் அறிந்ததே. அவருடைய ஞானம், அநுஷ்டானம், வைராக்யம் முதலிய குணங்களைக் கண்டு, அவரை எல்லோரும் தெய்வமாகவே கொண்டாடினது மிகையன்று என்பது இப்போது இருக்கும் நமக்கு அவருடைய கிரந்தங்களைப் பார்த்தாலே ஸ்பஷ்டமாகத் தெரியும். தேசிகன் இப் பூவுலகில் எழுந்தருளியிருந்த காலத்தில் (கி. பி. 1268—1368) இருந்த பாக்யவான்கள் அவரிடமிருந்து நேரில் விசிஷ்டாத்வைத தத்வார்த்தங்களை உபதேச ரூபமாகக் கேட்டார்கள். அவ்வர்த்தங்களையெல்லாம் பிற்பட்டார் இழக்கலாகாது என்று ஸ்வாமி தேசிகன் தன் காருண்யத்தினால் பல கிரந்தரூபமாக வெளியிட்டார். அவை ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும், இரண்டும் கலந்த மணிப்ரவாளம் என்னும் நடையிலும், ப்ராகிருதத்திலும் இருக்கின்றன. அவர் அருளிச்செய்த கிரந்தங்கள் 108 என்றும், சிலர் 116 என்றும் சொல்லுவார்கள். ஸ்வாமி எழுந்தருளியிருந்து இன்னும் 600 வருஷங்கள்கூட ஆகவில்லை. அப்படியிருந்தும் அவருடைய கிரந்தங்களில் சில பாதியாகவும், சில பூர்ணமாகவும் லுப்தங்களாய் (காணமற்போய்)விட்டன என்பது மிகவும் சோகிக்கத்தக்கதே.

மந்தமதிகளும் அறியும்படியும், ஞானவான்களும் திகைக்கும்படியும் அவருடைய கிரந்தங்களின் பெருமை இருக்கிறது. அவர் ஸம்ஸ்கிருதத்தில் செய்தருளின வசநரூபமான ப்ரபந்தங்களில் சில பூர்வ கிரந்தங்களுக்கு வ்யாக்யானமாகவும், சில ஸ்வதந்த்ரங்களாகவும் இருக்கின்றன. பலஸ்தோத்ரங்களும் செய்தருளியிருக்கிறார். தமிழில் அவருடைய பாசுரங்கள் கம்பீரமாகவும், இனிமையாகவும் இருப்பதை 'தேசிக ப்ரபந்தம்' என்னும் அவ்வுடைய ப்ரபந்தத்தை ஸேவிப்பவர்கள் தாங்களே உணரலாம்.

ஸ்ரீதேசிகனின் ரஹஸ்ய க்ரந்தங்கள்.

வேதங்களைக் கடைந்து அவற்றிலிருந்து கிடைக்கும் தத்வஹித புருஷார்த்த விஷயமான ஸாரார்த்தங்களையெல்லாம் தன்னுடைய 'ரஹஸ்யங்கள்' என்னும் க்ரந்தங்களில் வெளியிட்டருளினர். இவை மணிப்ரவாள நடையில் இருந்தாலும், ஆசார்யர்களைக்கொண்டே அறியவேண்டியவையாய் அவ்வளவு கம்பீரமாயும், அர்த்தம் நிரம்பினவையாயும் இருக்கின்றன. "திரளிலே சொல்லுமவைகளில் சில அர்த்தங்களை ஏகாந்தத்திலே சொல்ல விதிக்கையாலே, அவற்றை ரஹஸ்யங்கள் என்கிறது" என்று இவரே 'ரஹஸ்யங்கள்' என்பதின் அர்த்தத்தை விளக்கியிருக்கிறார். உபநிஷத் முதலான க்ரந்தங்களைப் படிப்பதற்கு வேண்டிய ஞான ஶக்த்யாதிகள் இல்லாதாரும் அவைகளில் சொல்லப்பட்ட பரதத்வ—பரமஹித—பரம புருஷார்த்த விஷயமான தத்வார்த்தங்களை இந்த ரஹஸ்யங்களை ஸேவித்தால் எளிதில் உணரலாம்.

இந்த ரஹஸ்யங்கள் முப்பத்திரண்டு என்பர். குரு பரம்பரா ஸாரம், ஸ்ரீஸ்தேயாவிரோதம் என்று ஒரு ரஹஸ்யம், இரண்டையும் கூட்டி முப்பத்திநான்கு என்றும் சொல்லுவார்கள். குரு பரம்பரா ஸாரம், ரஹஸ்யத்ரய ஸாரத்தோடு சேர்ந்தது; ஸ்ரீஸ்தேயாவிரோதம் என்பது லுப்தம் என்கிறார்கள். 'இதில் திருமங்கையாழ்வார் செய்தருளிய பரத்ரவ்யாபஹாரம் சாஸ்திர விருத்தமன்றோ என்கிற ஆக்ஷேபத்திற்கு, 'ராஜாக்கள் அதார்மிகர்களுடைய த்ரவ்யத்தை அபஹரித்துத் தார்மிகர்களுக்குக் கொடுப்பது ஶாஸ்திர ஸம்மதமாகையினாலே, திருமங்கையாழ்வாரும் ஒரு நாட்டுத் தலைவராயிருந்தபடியால், அப்படிச்செய்தது அஶாஸ்திரீயமல்ல என்று ஸமாதானம் அருளிச்செய்திருக்கலாம்' என்று பரமதபங்கத்திலிருக்கும் ஒரு வாக்யத்தைக் கொண்டு ஊஹிக்கப்படுகிறது.

இம் முப்பத்திரண்டில், இருபத்தியெட்டு 'சில்லரை ரஹஸ்யங்கள்' என்று சொல்லப்படுகின்றன. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம், பரமதபங்கம், பரமபத ஸோபாநம், ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் ஆகிய மற்ற நான்கும் தனி ரஹஸ்யங்கள்.

அவற்றுள் ஸ்ரீ ரஹஸ்யத்ரய ஸாரம் முப்பத்திரண்டு அதிகாரம் கொண்டது. முதல் இருபத்திரண்டு அதிகாரங்களால் தத்வஹித புருஷார்த்தங்களைப்பற்றிய விஷயங்களும், அடுத்த நான்கு அதிகாரங்களால் அவற்றில் வரும் சங்கைகளுக்குப் பரிஹாரமும், பிறகு மூன்று அதிகாரங்களால் ரஹஸ்யத்ரயத்தின் பதவாக்ய யோஜனைகளும்; அடுத்த இரண்டு அதிகாரங்களால் குரு சிஷ்யர்களுடைய க்ருத்யமும் கடைசி அதிகாரத்தால் நிகமநமும் செய்யப்படுகின்றன.

பரமதபங்கம்:-இருபத்திநாலு அதிகாரங்கள் கொண்டது. இதில் முதல் அதிகாரத்தில் தத்வஜ்ஞானமவச்யமென்றும், அடுத்த மூன்று அதிகாரங்களில் தன் ஸித்தாந்தப்படி ஜீவன், அசித், பரமாத்மா ஆகிய மூன்று தத்வங்களின் நிரூபணமும், அடுத்த பதிணைந்து அதிகாரங்களில் முறையே லோகாயதிக-மாத்யமிக-யோகாசார-ஸௌத்ராந்திக-வைபாஷிக-ப்ரச்சந்நபௌத்த-ஜைந-பாஸ்கர-வையாகரண-வைசேஷிக-நையாயிக-நிரீச்வரமீமாம்ஸக-நிரீச்வரஸாங்க்ய-யோக-பாசுபத மதங்களின் யுக்திகளை அருளிச்செய்து அவற்றின் நிராகரணமும்; அடுத்ததில், பகவச்சாஸ்திரங்களின் ப்ராமாண்ய ஸமர்த்தநமும், அடுத்த இரண்டு அதிகாரங்களில் இதர மதத்தினர் கூறும் உபாயப்ரயோஜநங்களின் தூஷணமும், கடைசியில் நிகமனமும் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

பரமபத ஸோபாநம்:-ஒன்பது பர்வங்கள் கொண்டது. மோக்ஷத்தில் விருப்பமுண்டாய ஒருவனுக்கு இருக்கவேண்டிய விவேகம், நிர்வேதம், வைராக்யம், ஸம்ஸாரபயம் என்ற நான்கையும் முதல் நான்கு பர்வங்களில் சொல்லி, ஐந்தாவதில் மோக்ஷோபாயாநுஷ்டானத்தை நிரூபித்து, பின் நாலில் சரீரம் விட்டவாறே உபாயமாஹாத்ம்யத்தால் அவனுக்கு வரும் பலங்களை பகவத்ப்ராப்திபர்யந்தமாகக் கூறியிருக்கிறார்.

ஹஸ்திகிரி மாஹாத்ம்யம்:-அல்லது ஸத்யவ்ரத க்ஷேத்ர மாஹாத்ம்யம் என்னும் ரஹஸ்யம், ப்ரஹ்மாண்ட புராணத்தில் கூறியுள்ளவாறு, காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பேரரு

ளாளரின் பெருமையைப் பாடுகிறது. ப்ரஹ்மாவின் அச்வ மேதத்தை ஸரஸ்வதியின் ப்ரவாஹத்திலிருந்து ரக்ஷிப்பதற்காக ஆவிர்ப்பவித்த வரதராஜன், அவருடைய பிரார்த்தனைக்கிணங்கி அங்கேயே வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் வழங்கக் கோலஞ்செய்து எழுந்தருளியிருக்கிறார் என்பதை இனிய பாட்டுக்கள் கலந்த வசநரூபமாக எழுதியுள்ளார்.

சில்லரை ரஹஸ்யங்களின் விஷய ஸங்கிரஹம்.

மோக்ஷத்தில் ஆசையுடைய ஒருவன் அவச்யம் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்களை இவ்விதம் பரபக்ஷ நிராஸ பூர்வகமாக அருளிச்செய்தவற்றையே ஞான சக்த்யாதிகள் குறைந்த ஏனையோரும் ஸேவித்து உணரும்படி 'சில்லரை ரஹஸ்யங்கள்' என்னும் பிரபந்தங்களைச் செய்தருளினர். இவற்றில் முதல் ரஹஸ்யத்தில் விஷயங்களை மிகவும் ஸங்கிரஹமாக அருளிச்செய்து பிறகு மேற்கொண்டு அறிய ஆவலும் சிரத்தையும் சக்தியும் வளர வளர படிப்படியாக ப்ரமாணங்களுடன் விஷயங்களை பரக்க நிரூபித்துள்ளார். இந்த ரஹஸ்யங்கள் இருபத்தெட்டு. இவற்றில் சொல்லும் விஷயத்தை அந்தந்த ரஹஸ்யத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் சுலோகத்தாலும் பாசுரத்தாலும் ஸங்கிரஹித்திருக்கிறார். இந்த இருபத்தெட்டில் முதல் பதினேழு ரஹஸ்யங்களிலுள்ள பாசுரங்களையெல்லாம் சேர்த்து "அம்ருதரஞ்ஜநீ" என்றும், பின் பதினொன்றிலுள்ளவற்றை "அம்ருதாஸ்வாதிநீ" என்றும் ஓதி வருகிறார்கள். இதையிட்டு முதல் வகுப்பை 'அம்ருதரஞ்ஜநீ ரஹஸ்யங்கள்' என்றும் பிந்தியதை 'அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்கள்' என்றும் சொல்லுவதுண்டு.

இந்த ரஹஸ்யங்களில் நிரூபிக்கப்பட்டுள்ள ஸாரமான அர்த்தமாவது: 'ஸகல சேதந சேதனங்களையும் சரீரமாக உடைய ஸ்ரீமானான நாராயணனே பரதத்வமான பரப்ரஹ்மம்; ஸ்ரீமானான அவனை யடைந்து அவனுக்குக் கைங்கர்யம் செய்வதே பரமபுருஷார்த்தம்; அப்புருஷார்த்தத்தையடைய பக்தி, ப்ரபத்தி என்று இரண்டு உபாயங்கள் உண்டு. பக்தியோகத்தை அனுஷ்

டிக்கப் போதிய ஞான சக்த்யாதிகளில்லாதாருக்கு ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளைச் சரணமாக அடைவது என்னும் ப்ரபத்தியே உபாயம் என்பது.

தத்வ பதவீ முதலானவற்றின் விஷய ஸங்கிரஹம்.

இவ்வர்த்தங்களையெல்லாம் தத்வபதவீ முதலான முதல் பதினேழு ரஹஸ்யங்களில் படிப்படியாக விஸ்தரித்து நிரூபித்துள்ளார். முதலாவதான ஸம்பிரதாய பரிசுத்தியில், ஸர்வேச்வரன் முதல் ஸ்ரீ பாஷ்யகாரர் வரைக்கும் வந்துள்ள ஆசார்ய பரம்பரையிலும் ஸம்பிரதாயார்த்தங்களிலும் வரும் சங்கைகளுக்குப் பரிஹாரத்தைக் கூறி 'ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸம்பிரதாயங்களில் யோஜனா பேதமே யொழிய அர்த்த விரோதமில்லை' என்று நிரூபித்தருளுகிறார். அடுத்த தத்வபதவீ, தத்வநவநீதம் முதலானவை தத்வங்களைப்பற்றிக் கூறுகின்றன. ரஹஸ்ய பதவீ, ரஹஸ்ய நவநீதம் முதலானவை ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களை விவரிக்கின்றன. தத்வபதவீ முதலானவற்றில் தத்வங்களை 'பரம், அவரம்' என்றும், 'போக்தா, போக்யம், ப்ரேரிதா' என்றும் பிரித்து, ஒவ்வொன்றிலும் உள்ள அவாந்தர பேதங்களைக் காட்டி, அவற்றின் ஸ்வரூபஸ்வபாவங்களை நிரூபித்துள்ளார். ரஹஸ்யபதவீ முதலானவை கூறும் விஷயமாவது: எவ்வளவு ஞானவானாயிருந்தாலும் மந்திரங்களைக்கொண்டே பகவானை உபாஸிப்பதோ சரணமடைவதோ செய்யவேண்டியிருப்பதாலும், தத்வார்த்தங்களை மந்திரங்களில் அநுஸந்தித்து உபாயத்தை அநுஷ்டிக்க வேண்டியிருப்பதாலும், மந்திரங்கள் அவசியம். அப்படிப் பல மந்திரங்கள் இருந்தாலும், அவற்றுள் ஜீவ பரமாத்ம ஸ்வரூபத்தை ஸ்பஷ்டமாகக் காட்டுகையால் திருமந்திரம் என்னும் திருவஷ்டாக்ஷரமும், அங்கங்களோடுகூடி உபாயமான ப்ரபத்தியின் ஸ்வரூபத்தையும் புருஷார்த்தஸ்வரூபத்தையும் ஸ்பஷ்டமாகக் காட்டுகையால் த்வயமும், உபாயத்தை விதிக்கையாலும் ப்ரபத்தி வேறொன்றை எதிர்பாராதிருப்பதைக் காட்டுகையாலும் சரம ச்லோகமும் முக்யமானவை. அவையே 'ரஹஸ்யத்ரயம்' என்று ஆசார்யர்களால் உபதேசிக்கப்பட்டு வருகின்றன. அந்த

ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தங்களும் ரஹஸ்யத்ரயத்தில் தத்வார்த்தங்களை அநுஸந்திக்கும் முறையும் ரஹஸ்ய பதவீ முதலான ரஹஸ்யங்களில் கூறப்படுகின்றன.

இந்த பதினேழு ரஹஸ்யங்களாவன: (1) ஸம்பிரதாய பரிசுத்தி; (2) தத்வபதவீ; (3) ரஹஸ்யபதவீ; (4) தத்வநவநீதம்; (5) ரஹஸ்ய நவநீதம்; (6) தத்வமாத்ருகை; (7) ரஹஸ்ய மாத்ருகை; (8) தத்வஸந்தேசம்; (9) ரஹஸ்ய ஸந்தேசம்; (10) ரஹஸ்ய ஸந்தேச விவரணம்; (11) தத்வரத்னாவளி; (12) தத்வரத்னாவளி ப்ரதிபாத்ய ஸங்கிரஹம்; (13) ரஹஸ்ய ரத்னாவளி; (14) ரஹஸ்ய ரத்னாவளி ஹ்ருதயம்; (15) தத்வத்ரய சுளகம்; (16) ரஹஸ்யத்ரய சுளகம் என்னும் ஸாரஸங்க்ஷேபம்; (17) ஸாரதீபம்.

தத்வஸந்தேசம் (8), ரஹஸ்யஸந்தேசம் (9), ரஹஸ்ய ஸந்தேசவிவரணம் (10) என்ற இந்த மூன்று ரஹஸ்யங்களும் மாதவன் என்பவனின் புத்ரனும், வாரங்கல் தேசத்தரசனும் ஸ்ரீஸ்வாமியின் சிஷ்யனுமான ஸர்வக்ஞ சிங்க நாயக்கனுக்கு அவனுடைய ப்ரார்த்தனைக்கிணங்கி ஸ்வாமியால் ஸந்தேச ரூபமாக எழுதப்பட்டன என்று சொல்லப்படுகின்றன. பதின்மூன்றுவதான ரஹஸ்ய ரத்னாவளி ஸ்வாமியின் தேவிகள் தனக்கு ஏதாவது உபதேசிக்கவேண்டும் என்று கேட்க, அவர்களுக்காகச் செய்யப்பட்டது என்று சொல்லப்படுகிறது. இதில் சேர்ந்த பதினேழாவது ரஹஸ்யமான ஸாரதீபம் கிடைக்கவில்லை.

ஸாரஸாரம் முதலியவற்றின் விஷய ஸங்கிரஹம்.

தத்வபதவீ முதலான 'அம்ருதரஞ்ஜநீ' ரஹஸ்யங்களில் மனோரஞ்ஜகமாக தத்வங்களின் நிரூபணத்தையும் ரஹஸ்யார்த்தங்களின் உபதேசத்தையும் செய்து, அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்கள் என்னும் அடுத்த பதினொரு ரஹஸ்யங்களில், இவ்வர்த்தங்களையெல்லாம் பூர்வர்களின் ஸூக்திகளில் வைத்து அநுபவிக்கும் வழியைக் காட்டுகிறார். இவற்றுள் முதலாக இருப்பது

ஸாரஸாரம். இது திருமந்த்ராதிகாரம், த்வயாதிகாரம், சரமஶ்லோகாதிகாரம் என மூன்று அதிகாரங்கள் கொண்டது. ரஹஸ்யத்ரயஸாரத்தில் மூலமந்த்ர-த்வய-சரமஶ்லோகாதிகாரங்களில் விஸ்தாரமாகக் கூறப்பட்ட அர்த்தங்களெல்லாம் மிகவும் ஸங்க்ரஹமாக ஸூத்திரம்போல் இதில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ரஹஸ்யத்ரய ஸாரத்தின் ஸாரார்த்தங்களையெல்லாம் காட்டுவதாலேயே 'ஸாரஸாரம்' என்று பெயர் வந்தது என்று சொல்லலாம்படி யிருக்கிறது. இதில் முதலதிகாரத்தில் ரஹஸ்யத்ரயம் ஸம்ஸாரபேஷஜம் என்றும், மூன்று ரஹஸ்யங்களின் ஆவச்யகதையும், அஷ்டாக்ஷரத்தின் பெருமையும், பிறகு மந்திரத்தின் பதங்களுக்கு ப்ரமாண பூர்வமாக அர்த்தவர்ணமும் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படியே த்வயம், சரமச்லோகம் இரண்டுமந்திரங்களின் அர்த்தமும் அடுத்த இரண்டு அதிகாரங்களில் கூறப்படுகிறது.

ஶரணாகதி வேதமெனப்படும் ஸ்ரீமத் ராமாயணத்தின் உபநிஷத் பாகமான விபீஷணஶரணாகதிப்ரகரணத்தைப்பற்றியது அபயப்ரதான ஸாரம் என்னும் அடுத்த ரஹஸ்யம். இதில் பத்து அதிகாரங்கள் இருக்கின்றன.

i முதலாவதான ப்ரபந்தாவதாரத்தில் ராமாயணம் ஆப்தரான வால்மீகியால் வேதத்திற்கு உபப்ரும்ஹண ரூபமாய் செய்யப்பட்டிருப்பதால் ப்ராமாணிகம் என்று கூறப்படுகிறது.

ii அடுத்த அதிகாரத்தில் 'பெருமாளே ஸர்வஶரண்யமான பரதத்வம்' என்பது பாலகாண்டத்திலிருந்து பரசுராம வாக்யத்தாலும், யுத்தகாண்டத்தில் ராவணவதத்திற்குப் பிறகு தேவதைகளும் ப்ரஹ்மாவும் செய்த ஸ்துதியாலும், உத்தர காண்டத்தில் ப்ரஹ்மாவினுடைய வாக்யங்களாலும் ஸ்தாபிக்கப் படுகிறது.

iii மூன்றுவதில், ஶரணாகதிதர்மமே ராமாயணத்தில் ஏழு காண்டங்களிலும் கோக்கப்பட்டிருக்கிறது என்பது பல ப்ர

கரணங்களை உதாஹரித்துக் காட்டப்படுகிறது. பாலகாண்டத்தில் தேவர்களுடைய ஶரணாகதியும், அயோத்யா காண்டத்தில் லக்ஷ்மணன், பரதன் இவர்களுடைய ஶரணாகதிகளும், ஆரண்ய காண்டத்தில் ரிஷிகளுடையதும், கிஷ்கிந்தா காண்டத்தில் ஸுக்ரீவனுடையதும், ஸுந்தர காண்டத்தில் காகத்தினுடையதும், அவ்விதமே பிராட்டியிடம் த்ரிஜடை செய்த ஶரணாகதியும், யுத்தகாண்டத்தில் விபீஷண வாக்யத்தாலே பெருமாள் ஸமுத்ரராஜனிடம் செய்த ஶரணாகதியும், கூறப்பட்டிருக்கின்றன. உத்தரகாண்டத்திலும் மால்யவான் வாக்யங்களால் ஶரணாகதி ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறது.

iv நாலாவதில் விபீஷணஶரணாகதிப்ரகரணத்தில் ப்ரபத்தியின் ஐந்து அங்கங்களும் கிடக்கிறபடியும், விபீஷணன் பகவத் கைங்கர்யத்திலாசையோடு பெருமாளிடம் வந்ததும் நிரூபிக்கப்படுகிறது.

v ஐந்தாவதில் ரக்ஷிப்பவனுக்கு வேண்டிய பரத்வம் ஸௌலப்யம் முதலிய குணங்கள் பெருமாளிடம் இருப்பது அபயப்ரதான ப்ரகரண ஶ்லோகங்களை வ்யாக்யானம் செய்து காட்டப்படுகிறது.

vi பெருமாளுக்கு ஜ்ஞாநம், ஶக்தி, காருண்யம் முதலிய குணங்களிருப்பதைக் காட்டி ஶரண்ய வைபவம் சொல்லப்படுகிறது.

vii ஶரணாகதரக்ஷணமே பரமதர்மம் என்பது கபோதோபாக்யானம், கண்டுகாதை, வ்யாக்ரவாநரஸம்வாதம், நஹுஷப்ருஹஸ்பதி ஸம்வாதம் முதலியவற்றால் உபபாதிக்கப்படுகிறது.

viii ஶரணாகதரக்ஷணமே பெருமாளுடைய வ்ரதம் என்பது காட்டப்படுகிறது.

ix, x இரண்டு அதிகாரங்களினாலும் ஸுக்ரீவாதிகள் புருஷகாரம் செய்ய விபீஷணனுக்கும் பெருமாளுக்கும் ஏற்பட்ட

சேர்க்கையும், சேர்ந்தபின் இருவருடைய ஸம்வாதங்களும் கூறப்பட்டு, உப ஸம்ஹார ஶ்லோகத்தால் ராவணவத பர்யந்த கதை ஸங்க்ரஹிக்கப்படுகிறது.

நான்காவது ரஹஸ்யமான ரஹஸ்யஶிகாமணி வராஹ புராணத்திலிருப்பதும் 'வராஹ சரமம்' என்று சொல்லப்படுகிறதுமான இரண்டு ஶ்லோகங்களுக்கு வ்யாக்யான ரூபமாய் இருக்கிறது. இதில் வராஹாவதாரத்திற்கு மற்ற அவதாரங்களைக் காட்டிலும் உண்டான ஏற்றத்தையும், ஸர்வலோக மாதாவான பூமிப்பிராட்டி ஸர்வலோகஹிதமான ஒருபயாயத்தைச் சொல்லவேண்டும் என்று கேட்க, ஸர்வ ஜகத் பிதாவும் ஸர்வஜ்ஞருமான வராஹபகவான் அருளிச்செய்தார் என்பதால் வராஹ புராணத்திற்கும் இந்த சுலோகத்வயத்திற்கும் உண்டான பெருமையை முதலிலருளிச் செய்து, அதன் பின்பு உபாய விசேஷத்தையும் அதை அநுஷ்டித்தால் வரும் புருஷார்த்த லாபத்தையும் காட்டும் இரண்டு ஶ்லோகங்களையும் வ்யாக்யானம் செய்தருளுகிறார்.

ஐந்தாவதான அஞ்ஜலிவைபவம் ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்தோத்ர ரத்னத்திலுள்ள "த்வதங்க்ரிமுத்திஶ்ய" என்கிற இருபத்தெட்டாவது சுலோகத்தின் வ்யாக்யானம். இந்த சுலோகத்தினால் முமுக்ஷுவான அதிகாரி ஸ்ரிய: பதியையே ஆச்ரயித்திருப்பதும், ப்ரயோஜநாந்தரங்களில் பற்றற்றபடியும், அவன் செய்யுமுபாயமான அஞ்ஜலிக்குக் காலநியமம், அதிகாரி நியமம், ப்ரகார நியமம் முதலியவை இல்லை என்பதும், இவ்வுபாயத்தை மறுமுறை அநுஷ்டிக்கவேண்டுவதில்லை என்பதும், இது அப்போதே ஸகல அசுபங்களையும் போக்கி ஸர்வ சுபங்களையும் கொடுக்கும், இதன் பலமான மீளாவடிமைப் பணி ஒருக்காலும் அழியாது என்பதுமான இவ்வர்த்தங்கள் முறையே பதங்களில் காட்டப் படுகின்றன. பக்தி அல்லது ப்ரபத்திதான் மோக்ஷத்திற்கு உபாயம் என்று சொல்லும் ஸர்வசாஸ்த்ரங்களோடும் விரோதம் வாராமைக்காக, இங்கு சொன்ன அஞ்ஜலி ஓரதிகாரி அநுஷ்டிக்

கும் உபாயமான ப்ரபத்தியைக் காட்டும் முத்ரை என்றும் கூறப்படுகிறது. கடைசியாக இவ்வதிகாரியினிடம் விசேஷித்துக் காணப்படும் நாலு ஆகாரங்களும், அவற்றையுடையவர்களுக்கு நிதர்சனம் நாதமுனிகள் முதலான ஆசார்யர்கள் என்றும் கூறப்படுகிறது.

அடுத்த ரஹஸ்யம் ப்ரதாநாஶதகம். இதில் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தார்த்தங்களில் பிரதானமான நூறு அர்த்தங்கள் கூறப்படுகின்றன.

1—6: ப்ரமாணங்களில் ப்ரதானமானவை.
7—16: திருமந்திரத்தில் பரமாத்மஸ்வரூபம்.
17—21: „ ஜீவஸ்வரூபம்.
22—30: மத்யமபதத்தால் கூறப்பட்ட உபாய விஶேஷம்.
31—32: நாராயணஶப்தம்.
33—36: த்வய விஷயம்.
37—44; இதிஹாஸ புராணங்களில் ப்ரதானமானவை.
45—47: சரம ஶ்லோகம்.
48—51: ப்ரபந்நர்களில் ப்ரதாநர்.
52—54: ப்ரபந்நர்களுடைய உத்தரக்ருத்யம்.
55—63: இங்கிருந்த நாள் அவர்களால் விலக்கத்தக்கவர்களும் கூடத்தக்கவர்களும்.
64—80: அவர்களுடைய கைங்கர்யங்கள், அதற்குரிய காலம், தேசம் முதலியவை.
81—84: கைங்கர்ய விரோதிகள்.
85—88: அபராத பரிஹார ப்ரகாரம்.
89—93: ஆசார்ய விஷயம்.
94—98: அநந்ய ப்ரயோஜநனான அதிகாரி.
99-101: அவன் விரும்பும் ஸுகமும் மோக்ஷமும்.

ஏழாவது ரஹஸ்யம் உபகாரஸங்கிரஹம். இதனுடைய மூன்று அதிகாரங்களில் ஈஶ்வரன் செய்த பூர்வோபகாரங்களை அநுஸந்தித்துக்கொண்டு மேற்செய்யவேண்டிய உபகாரங்களை

அவனிடம் அபேக்ஷிக்கும் பிரகாரம் சொல்லப்படுகிறது.

முதல் அதிகாரம்:— ஸர்வேஶ்வரனுடைய பூர்வோபகாரங்கள்—ஸர்வேஶ்வரன் ஸ்வேச்சையாலே அநாதிகாலமாய்ச் செய்யும் ப்ரதானமான நாலு உபகாரங்களும், ஸகல ஜீவர்களுக்கும் ஸ்ருஷ்டி காலம் முதல், மோக்ஷத்தில் ஆசையுண்டாகி, உபாயத்தை அநுஷ்டிக்கும் வரையில், செய்யும்உபகாரங்களும்.

இரண்டாவது அதிகாரம்:— ஸர்வேஶ்வரனுடைய மத்யோபகாரங்கள்: மோக்ஷோபாயத்தை அநுஷ்டித்தவனுக்கு இங்கிருந்த நாட்களிலும், சரீரம் விடும்போதும் செய்யும் உபகாரங்கள்.

மூன்றாவது அதிகாரம்:— உபாய மாஹாத்ம்யத்தால் ஸம்ஸாரதசை கழிந்த அதிகாரியை தன்னுலகத்திற்கு அழைத்துச் செல்லும் பரமாத்மா மத்தியில் அர்ச்சிஸ் முதலான தேவதைகளையும் நித்யஸூரிகளையும் கொண்டு இவனுக்குச் செய்யும் பூஜாரூபமான உபகாரங்கள்.

ஆக மூன்று அதிகாரங்களிலும் முன்னும் நடுவும் பின்னும் செய்யும் உபகாரங்களைக் கூறி, நம்மாழ்வார் செய்தருளின திருவிருத்தம் என்னும் பிரபந்தத்தின் முதற்பாட்டில் இவ்வர்த்தங்களை யெல்லாம் அநுஸந்திக்கும் பிரகாரத்தை அதற்கு வ்யாக்யானம் செய்து காட்டுகிறார்.

எட்டாவதான ஸாரஸங்க்ரஹத்தில் முமுக்ஷுவான ஒருவன் கைக்கொள்ளவேண்டியவை, கழிக்கவேண்டியவை இவற்றின் பிரிவும்; ப்ரமாணம், தத்வம், உபாயம், புருஷார்த்தம் இவற்றைப் பற்றிய பத்துவிதமான விவேகமும், அவற்றாலுண்டாகும் பலனும், ஆசார்யாதி க்ருத்யமும், ஸர்வஸங்க்ரஹமான அர்த்தமும் ஸங்கிரஹிக்கப்படுகின்றன.

அடுத்ததான விரோதபரிஹாரத்தில் மூன்று அதிகாரங்களில் முறையே ரஹஸ்யத்ரயத்தில் வரும் ஶங்கைகளும் அவற்றுக்குப்

பரிஹாரமும், நாலாவது அதிகாரத்தில் நிகமனமும் செய்யப் படுகின்றன.

பத்தாவதான முநிவாஹநபோகம் திருப்பாணாழ்வார் செய் தருளின அமலனாதி பிரான் என்னும் பிரபந்தத்தின் பத்து பாசு ரங்களுக்கும் ரஸம் ததும்பும் வ்யாக்யானமாயிருக்கிறது.

பதினோராவது மதுரகவிஹ்ருதயம். இது லுப்தம். இது மதுரகவியாழ்வார் அருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்புக்கு வ்யாக்யானமாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

ஆக ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யங்கள் முப்பத்தி ரண்டு. அவற்றுள் ரஹஸ்யத்ரயஸாரம், பரமதபங்கம், பரமபத ஸோபாநம், ஹஸ்திகிரி மாஹாத்ம்யம், ஆகிய நான்கும் தனி ரஹஸ்யங்கள். மற்ற இருபத்தெட்டும் சில்லரை ரஹஸ்யங்கள். இவற்றுள் முதல் பதினேழில் ஸம்பிரதாய பரிசுத்தி தவிர மற்ற பதினாறும் தத்வார்த்தங்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் விவரிப் பவை. பின் பதினொன்றும் அறிந்த அர்த்தங்களை பலவிதமாகப் பிரித்து அநுஸந்திக்கும் வழிகளையும், அவற்றை இதிஹாஸம், புராணம், ஆழ்வார்களின் அருளிச்செயல்கள், பூர்வாசார்யர் களுடைய ஸ்ரீஸூக்திகள், இவற்றில் வைத்து அநுபவிக்கும் பிரகாரங்களையும் காட்டுகின்றன.

சில்லரை ரஹஸ்யங்களில் பதினேழாவதான ஸாரதீபமும், இருபத்தொன்றாவதான தத்வசிகாமணியும், இருபத்தொன்ப தாவதான மதுரகவிஹ்ருதயமும் லுப்தங்கள். ஆகையால் இருபத்தைந்து தான் கிடைக்கின்றன.

ரஹஸ்யங்களின் நிர்மாணக்ரமம்.

இந்த ரஹஸ்யங்களெல்லாம் செய்யப்பட்ட வரிசையையும் காலத்தையும் நிச்சயிப்பதற்கு ஸாதகமான ஸ்பஷ்டமான ஒரு ஹேதுவும் தெரியவில்லை. தத்வபதவீ முதலான முதல் பதினேழில் இரண்டு ரஹஸ்யங்கள் முந்தினவற்றுக்கு வ்யாக்யானமாயிருப்

பதால் அவை ஸம்பந்தப்பட்டவரையில் க்ரமம் ஸ்பஷ்டம். தத்வ ஸந்தேசத்தின் நிகமநச்லோகம் ரஹஸ்ய ரத்நாவளி ஹ்ருதயத்தில் உதாஹரிக்கப்படுகிறபடியால், அது முந்தியது என்பதும் ஸ்பஷ்டம். மேல் போகப் போக க்ரமேண விஸ்தாரமாயிருப்பதால் அவற்றின் க்ரமத்தையும் ஒருவாறு ஊஹிக்கலாம். பின் பதினொரு ரஹஸ்யங்களில் அவ்விதமான காரணங்கள் ஒன்றுமில்லை. ஒவ்வொன்றும் தனித்தனியாயிருக்கிறது.

தேசிக ப்ரபந்தத்தில் அம்ருதரஞ்ஜனிப் பாட்டுக்களை அநுஸரித்து ஸம்பிரதாய பரிசுத்திமுதல் ரஹஸ்யத்ரய சுளகம் வரையில் ஒரு க்ரமமாக எண்ணுவது போல, அம்ருதாஸ்வாதினி பாட்டுக்களை அநுஸரித்தே ஸாரஸாரம் முதல் முநிவாஹநபோகம் வரையில் வரிசையாக எண்ணப்படுகின்றன.

இப்போது பதிப்பிக்கப்படும் சில்லரை ரஹஸ்யங்களில், ஸாரஸாரம் என்பதை பத்தொன்பதாவதாக எழுதியிருப்பது இதற்குமுன் வெளிவந்த கிரந்தத்தை அநுஸரித்துச் செய்யப்பட்டிருக்கிறது. முதல் ரஹஸ்யங்கள் பதினேழு என்று சொல்லப்படுகிறது; ஸாரஸாரம் பத்தொன்பதாவதானால், பதினெட்டாவது எது என்று தெரியவில்லை. ஹஸ்திகிரி மாஹாத்ம்யத்தை முப்பத்திரண்டாவது என்று எண்ணுகிறார்களாகையால், ரஹஸ்யத்ரயஸாரம், பரமதபங்கம், பரமபதஸோபாநம் என்கிற மூன்றுக்குள் ஏதாவது ஒன்றாக இருக்கவேண்டும்.

விரோத பரிஹாரத்தில் அறுபத்திநாலாம் வாக்யத்தில் "ரஹஸ்யத்ரயஸாரத்திலே பரக்கச் சொன்னோம்" என்றும் நூற்றைந்தாம் வாக்யத்தில் "ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரத்தில் ஸாரநிஷ்கர்ஷாதிகாரத்திலே ஸமர்த்தித்தோம்" என்றும் கூறியிருப்பதால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் அதற்கு முற்பட்டது என்பது ஸ்பஷ்டம். அதுபோலவே பதினொருவதான ரஹஸ்யத்ரய சுளகத்திற்கும் அது முற்பட்டது என்று எண்ண இடமிருக்கிறது. ரஹஸ்யத்ரய சுளகத்தின் சரமச்லோகாதிகாரத்தில் 'ஸர்வபாப' சப்தத்திற்குப் பொருளைக் கூறிவிட்டு, "இங்கே

'ஹாரவெஹு தாவஹவஹுவாவஜவிறும்' என்கிற சுலோகத்தைப் படிப்பது' என்று சொல்லியிருப்பதாலும் இந்த ஶ்லோகம் ஸ்ரீ ரஹஸ்யத்ரஸாரத்தின் அபராதபரிஹாராதிகாரத்தின் முடிவிலுள்ளதாலும் ரஹஸ்யத்ரயஸாரம் இதற்கும் முற்பட்டது என்று நிச்சயிக்க வேண்டியிருக்கிறது.

ஆகையால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திற்குப் பிறகும் ஸ்ரீதேசிகன் கிரந்தங்கள் செய்தருளினர் என்று தெரிகிறது.

லுப்தம் என்று சொல்லப்படும் பதினேழாவது ரஹஸ்யமான ஸாரதீபமும், இருபத்தொன்பதாவதான மதுரகவிஹ்ருதயமும், முறையே பதினேழு ரஹஸ்யங்களின் கடைசியிலும் பதினொரு ரஹஸ்யங்களின் கடைசியிலும் இருக்கின்றன. அவை கிடைக்காததால், அவற்றிலிருக்கக்கூடிய பாசுரங்கள் தேசிக ப்ரபந்தத்தைச் சேர்ந்த அம்ருதரஞ்ஜனி, அம்ருதாஸ்வாதினி இவற்றில் சேராமலிருக்கலாம். ஆனால் தத்வசிகாமணி இருபத்தோராவது; அதுவும் லுப்தம் என்கிறார்கள். அதில் பாசுரங்களே கிடையாதா, அல்லது இந்தப் பதினொரு ரஹஸ்யங்களின் முன் பின் பாசுரத்தைச் சேர்த்து அம்ருதாஸ்வாதினீ என்று பெயரிட்டவர்கள் காலத்திலேயே அது லுப்தமா என்பது தெரியவில்லை. ஸ்ரீதேசிகன் காலத்திலேயே இவைகள் இவ்விதம் சேர்த்து அம்ருதாஸ்வாதினி என்று அநுஸந்திக்கப்பட்டன என்றுசொல்லமுடியாது. அப்படி இருந்தால் நாதமுனிகள்செய்த ந்யாயதத்வம் லுப்தமானாலும் மங்கள ஶ்லோகம் இருப்பது போல ரஹஸ்யம் லுப்தமானாலும் பாசுரங்கள் இருக்கவேண்டும். ஸ்ரீதேசிகனுக்குப் பின் யாரோ பாசுரங்களைச் சேர்த்தநுஸந்திப்பதற்காக இருந்தவற்றைச் சேர்த்து வைத்தார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அவருடைய காலம் முதலானவை, தெரிந்தால், அதிலிருந்து விமர்ஶகர்கள் ஏதாவது கண்டுபிடிக்கலாம். அல்லது தத்வபதவீ, ரஹஸ்யபதவீ, தத்வநவநீதம், ரஹஸ்யநவநீதம் என்று செய்திருப்பதால் ரஹஸ்ய சிகாமணிக்கு முன் ஒரு தத்வஶிகாமணி இருக்கவேண்டும் என்று ஊஹித்துச்

சேர்க்கப்பட்டதாக இருக்கலாம். எவ்வளவு காலமாக இப்படி ஒரு ரஹஸ்யம் லுப்தம் என்று சொல்லப்பட்டு வருகிறது என்பதும் தெரியவில்லை. ஸ்ரீதேசிகனுடைய ரஹஸ்யங்களில் விசேஷஜ்ஞானமும் அனுபவமுமுடைய பெரியோர்கள் இவ்விஷயத்தில் அறிய ஆவலுடைய அடியேனைத் தெளிவிக்கவேண்டும் என்பதற்காகவே எழுதலானேன். ஜ்ஞானவான்கள் உபகரிப்பார்களாக.

மந்தமதியான அடியேன் யதாமதியும் யதாசக்தியும் இந்த ரஹஸ்யங்களை சோதித்து வெளியிட்டிருக்கிறேன். இந்த உயர்ந்த கிரந்தம் துர்லபமாயிருக்கிறது என்பதைப் பற்றி இப்போது இதை பதிப்பித்தோமேயொழிய, ஸுபரிஷ்க்ருதம் என்கிற புத்தியாலல்ல. இதிலிருக்கும் குற்றம் குறைகளை க்ஷமித்து, அவற்றைத் திருத்திக்கொள்ளும் பொருட்டு அடியேனுக்குத் தெரிவிப்பார்களானல் அவர்கள் விஷயத்தில் க்ருதஜ்ஞதை யுடையவனாக இருப்பேன்.

ப்ரீயதாம் தேவீ லக்ஷ்மீ: பகவாந் வாஸுதேவஶ்ச.

புதுக்கோட்டை,
1—12—1937.

ஸ்ரீநிவாஸராகவன்.

திருத்தம்.

பக்கம்.	வரி.	அசுத்தம்.	சுத்தம்.
10	26	ஸ்ரீரங்ககத்யம்	சரணாகதிகத்யம்
11	15	'அஸ்' 'த்' என்பது	'அஸ்' 'அத்' என்பது
14	25	ஸிஷிக்கும்	ஸிஜிக்கும்
16	25	†[illegible]—17-வது பக்கத்தில் இருக்கவேண்டும்.	
23	27	அஷ்ட. 1.	அஷ்ட. 3.
32	11	[illegible]	[illegible]
34	21	ஸ்ரீணாநி	ஸ்ரீணாதி
36	6	[illegible]	[illegible]
47	6	[illegible]	[illegible]
50	24	¹3.7.7.	²7.5.10. ³ஸ்தோ.ர.31.
51	11	[illegible]	[illegible]
61	17	[illegible]	[illegible]
84	9	[illegible]	[illegible]
95	21	[illegible]	[illegible]
100	14	[illegible]மாயிற்று	[illegible]மாயிற்று
103	12	[illegible]	[illegible]
125	4	என்பானேரு	என்பானெரு
136	5	[illegible]	[illegible]
137	23	[illegible]யில்	[illegible]யில்
138	21		நாடீஜங்கள் என்னும்
152	15	[illegible]	[illegible]
157	18		[illegible]தமான
158	14	[illegible]	[illegible]
159	4		[illegible]
166	24	ஆரம்பத்திலே மூழுகி	ஆரம்பத்திலே முழுகி
168	10		[illegible]

170	4,5	கூடக்காட்டுகிறது.	உத்தரச்லோகம், உபாஸநத்திற்குப் போலே
189	2	ஸுஹ்ருதம்	ஸௌஹ்ருதம்
200	28	ப்ரகாஶங்கள்	ப்ரகாஶகங்கள்
211	21	[illegible]	[illegible]
224	20		[4] கி. மொ. 9. 7: 7
229	5	சுக்ஷணங்கர்களான	சுஜணஜர்களான
230	11	அரஷிந்தலோசனை	அரவிந்தலோசனனை



ஸ்ரியை நம: ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த
ரஹஸ்யங்களில் ௧௯-வது ரஹஸ்யமான

ஸாரஸாரம்.

*ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

†ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் ।
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ॥

‡சீரொன்று தூப்புல் திருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

---

* நயினாராச்சாரியார் அருளிச்செய்தது.

† ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி அருளிச்செய்தது.

‡ பிள்ளை லோகாச்சாரியார் அருளிச்செய்தது.

(சீரொன்று) ஸகல கல்யாண குணங்களுடன் கூடிய தூப்புல் நகரில்

ப்ரணதிம் வேங்கடேஶஸ்ய பாதயோர் விததீமஹி ।
யத்ஸூக்தயோ யதீந்த்ரோக்திரஹஸ்யாநாம் ரஸாயநம் ॥

மூலங் கிளையென வொன்றிரண் டான மொழியிரண்டும்
மேலொன் றிலையென நின்றவவ் வித்தகன் றன்னு
ரையும்
காலங் கழிவதன் முன்னங் கருத்துறக் கண்டிடவே
ஞாலம் புகழுநந் தேசிகர்தா நம்மை வைத்தனரே. 1

1“ கண்ணபுரமொன்றுடையானுக் கடியேனொரு வர்க்குரியேனோ ” என்கிறபடியே ஸர்வேஶ்வரனுக்கு 1 அநந்யார்ஹஶேஷபூதனாய் * இருந்து வைத்து, 2அநாதிகர்மப்ரவாஹத்தாலேயடிமை செய்யப்பெறாதே

அவதரித்த திருவேங்கடமுடையானாகிய ஆசார்யர் அநுகூலரும் ப்ரதிகூலரும் விஶாலமாகிற பூமியிலுள்ளாரனைவரும் அங்கீகரிக்கும்படி அழகாக அருளிச்செய்த ப்ராசீநஸம்ப்ரதாயஸித்தாந்தப்ரதிபாதகமான ஸ்ரீஸூக்திகளில் ஒவ்வொன்றே யாவஜ்ஜீவம் செல்லுமளவும், ஸம்ஸார க்லேஶம் தட்டாதபடி நமக்கு வாழ்வாகப் போதும், இதற்கு மாறுபாடில்லை.

1. தனக்கொரு உபகாரத்தை எதிர்பாராமல், பரோபகாரத்திற்காகவே இருக்கும் வஸ்துவுக்கு ‘ஶேஷம்’ என்றும் ‘ஶேஷபூதம்’ என்றும் பெயர். அவ்வுபகாரத்தை யடைபவனுக்கு ‘ஶேஷி’ என்று பெயர். அநந்யார்ஹஶேஷபூதமாவது ஸர்வேஶ்வரன் தவிர மற்றொருவருக்குத் தகுதியில்லாதது.

2. கர்மப்ரவாஹ— (இன்ன காலத்தில் ஆரம்பித்தது என்று கூறமுடியாமல் முன் ஜன்மத்தில் செய்த புண்யபாபரூபகர்

---

[1] தி. மொ. 8-9-3. * வந்து க. வ. பாடம்.

நின்ற [1] க்ஷேத்ரஜ்ஞன் [2] அவஸரப்ரதீக்ஷையான ஸர்வசக்தியாலே [3] * புரிந்து ஸாத்தியோபாயத்தாலே பெற்ற ரஹஸ்யத்ரயமாகிற ஸம்ஸாரபேஷஜத்தை உபஜீவிக்கும்படி சொல்லுகிறோம்.

ஸ்வரூபந் தெளிந்தவனுக்கல்லது [4] ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்தில் [5] அபிருசியும் [6] தத்தோபாயபரிக்ரஹமும் † கூடாமையாலே, ஸ்வரூப [7] வைஶத்யஹேதுவான திருமந்த்ரம்முற்பட அநுஸந்தேயம். இதில் பதங்களிலே ஶப்தமுமாய் ஶாரண்யமுமாய் ஸ்தாப்யமுமாய் தோற்றின பரதத்வத்தை பதவிபக்ரஹ விஶேஷங்களாலே விஶிஷ்டமாக வெளியிடுகையாலும், சதுர்த்தியில் ஶப்தாயுஸ்ஸாவங்களாலே ஸாக்ஷித்வமாய் தோற்றின உபாயவிஶேஷத்தை அநுஷ்டாநத்தாலே காட்டுகையாலும், மந்த்ரமாய் [8] அஷ்டாக்ஷரமாக

மங்களால் இந்த ஜன்மமும் இதன் கர்மங்களும், இந்த ஜன்மத்தில் செய்ததால் வேறொரு ஜன்மமுமாக, இவ்விதம்) ஆற்றுப்பெருக்குப் போல் இருந்துவரும் கர்மம்.

1 க்ஷேத்ரஜ்ஞன்—(ஶரீரத்தோடு சேர்ந்திருக்கும்) ஜீவாத்மா.

2 அவஸரப்ரதீக்ஷையான—(ரக்ஷிக்கும்) ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கிற

3 புரிந்து—திரும்பி, 5 அபிருசி—ஆசை

4 ஸ்வரூபாநுரூபமான—ஸ்வரூபத்திற்கேற்ற

6 உபாயபரிக்ரஹ—உபாயாநுஷ்டானம்

7 வைஶத்யம்—தெளிவு (க்குக் காரணமான)

8 அஷ்டாக்ஷரம்—நான்கு காதுகளுக்கு(இருவருக்கு)மேல் வேறொருவருக்குக் கேட்காதபடி

பா. * பிரிந்து—க. வ. ம. † உண்டாகாமையாலே—க. வ. ம

உபதேசிக்கவேண்டின சேர்த்தியாலும், "க்ஷத்ரத்திலே பிறந்து அயத்திலே வளர்ந்து" என்கிற ஸூக்தத்தாலும், ஸுகரம் அயத்நஸாத்யம். இவை யிரண்டிலும் தோற்றின உபாயத்தின் ஸ்வீகாரவிரோதத்தையும், இது [1] துஷ்கராங்கநிரபேக்ஷமாய் ஸ்வதந்த்ரமுமான நிலையையும், *விரோதிநிவர்த்தகத்வத்தையும் வெளியிட்டு, [2]அகிஞ்சநனை ஸம்ஸாரார்ணவத்திலே மூட்டி [3]தளும்பாதபடி தேற்றுகையாலும், ஸர்வஶோகஶமநஸாத்யம். இவற்றில் ஸ்ரீமதஷ்டாக்ஷரமாகிற மஹாமந்த்ரம் பல உபநிஷத்துக்களிலும் [4]உபப்ரும்ஹணங்களிலும் ப்ரஸித்தமாய், 1"த்ரயோ வேதா: ஷடங்காநி" இத்யாதிகளிற்படியே ஶ்ருதி ஸ்ம்ருதிகளெல்லாத்திலுமுள்ள ஸாரதமாம்ஶங்களைப் [5] பொதிந்துகொண்டிருப்பதாய், 2"யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்த:" இத்யாதிகளிற்படியே [6] ஸர்வாநிஷ்டநிவர்த்தநக்ஷமமாய், 3 "ஐஹலௌகிகமைஶ்வர்யம்" இத்யாதிகளிற்படியே ஸர்வபுருஷார்த்தங்களுக்கும் ஸாதநமாய், 4"ஸக்ருதஷ்டாக்ஷரம் ஜப்த்வா" இத்யாதிகளிற்படியே ஜபயஜ்ஞாநாதிரூபத்தாலே கர்மயோகாதிகளெல்லாத்துக்கும் உபகாரகமாய், 5"ந ஸ்வர: ப்ரணவோ(அ)ங்காநி"

1துஷ்கராங்கநிரபேக்ஷ—செய்வதற்கு அரிதான அங்கத்தை எதிர்பாராததாய் 2 அகிஞ்சநன்—கைமுதலற்றவன்
3தளும்பாதபடி—கலங்காதபடி 4உபப்ரும்ஹணம்—வ்யாக்யானம்
5பொதிந்துகொண்டு—நிரம்பி
6ஸர்வாநிஷ்டநிவர்த்தநக்ஷமமாய்—எல்லா விரோதிகளையும் நீக்க சக்தியுள்ளதாய் * விரோதி நியமத்தையும்—வ.

1. ஸ. ஸ்ரு. 1. 9. 3. நார. 5. ஸ. ஸ்ரு. 1. 104.
2. ஸ. ஸ்ரு. 1. 20. 4. ஸ. ஸ்ரு. 1. 10.

1"வைதிகம் தாந்த்ரிகம் சைவ" இத்யாதிகளிற்படியே தந்த்ராதிகாராநுகுணமாக ஸர்வவர்ணங்களுக்கும் [1] உபஜீவ்யமாய், 2"சேதநாசேதநம் ஸர்வம்" இத்யாதிகளிற்படியே சேஷசேஷி ஸர்வதத்வ [2]கண்டோக்தத்தாய், 3"கிம் தத்ர பஹுபிர்மந்த்ரை:" 4"ஸகோஷ்டாக்ஷர ஸவாயதநஸூதவிஸர்ஜயே" என்கிறபடியே ஸர்வமந்த்ர ஸைந்யாபேக்ஷ்யகரமாய், 5"ஸர்வமந்த்ராஷ்டாக்ஷரோமந்த்ர: ஸ்ருதி மந்த்ரா யதா பவேத்" என்கிறபடியே ஸர்வபுருஷார்த்திகளுக்கும் [3]ஸாதாரணமாய், 6"ந மந்த்ராஷ்டாக்ஷராத்பர:" 7"மந்த்ராணாம் பரமோ மந்த்ர:" இத்யாதிகளிற்படியே [4]ஸர்வவ்யாபகமந்த்ரங்களிலும்ப்ரதாநமாயிருக்கையாலே, ஸர்வாசார்யர்களுமித்தையே ஆதரிப்பார்கள். ஆழ்வார்களும் 8"நின் திருவெட்டெழுத்துங் கற்று" என்றும், 9"எட்டெழுத்துமோதுவார்கள்" என்றும், 10 "எட்டெழுத்தும் வாரமாக ஓதுவார்கள்" என்றும் இம்மந்த்ரத்தையே பரவார்த்தஸாரமாக அருளிச்செய்தார்கள். அநுகூலப்ரதிகூலஸாதாரணமான ஜந்மம் போலன்றிக்கே, 11"பிறந்தபின்மறந்

[1] உபஜீவ்யம்—(அடைந்து) நன்மை பெறக்கூடியது.

[2] கண்டோக்தம்—(சேதநன், அசேதநம், ஈச்வரன் என்று மூன்று தத்வங்களையும்) ஸ்பஷ்டமாகக் காட்டுவது.

[3] ஸாதாரண—பொதுவானது

[4] வ்யாபகமந்த்ரங்கள்—ஷடக்ஷரம், அஷ்டாக்ஷரம், த்வாதசா[க்ஷரம்.

1. விஷ்வக்ஸேநம்	5.	
2. நார.	6. நா. வா. 18. 32.	9. தி. ச. வி. 77.
3. அ. ஸு. 1. 41.	7. அ. ஸு. 1. 11.	10. ,, ,, 78.
4. ,, ,, 1. 17.	8. தி. மொ. 8. 10. 3.	11. ,, ,, 64.

திலை" என்கிற ப்ரேக்ஷஜநும் *ஆசார்யன் உபதேசித்த திருமந்த்ரமடியாக வருகிறது. இதில் வேதங்களில் ஓரக்ஷரமென்றும் இரண்டக்ஷரமென்றும் அஞ்சக்ஷரங்களென்றும் ஶ்ருதிகள் வகுத்தன. இது [1]"நாடுநகரமும் நன்கறிய நமோ நாராயணாய" வென்றும், [2]"நல்வகையால் நமோ நாராயணா" வென்றுஞ் சொல்லுகிறபடியே ப்ரணவஸஹிதமானபோது அஷ்டாக்ஷரமாம்படி [3]"ததேதந்நாராயணஸ்யாஷ்டி:" என்கிற நாராயணோபநிஷத்தாலே ஸித்தம். இது [4]"நமோ நாராயணேத்யுக்த்வா ஶ்வபாக: புநராகமத்" [5] † "நாமம் சொல்லில் நமோ நாராயணமே" இத்யாதிகளிற்படியே ப்ரணவவர்ஜிதங்களை யொழிந்தால் ஸர்வாதிகாரமாம்.

இதில் ப்ரணவத்தை [6]"மூலமாகிய ஒற்றை யெழுத்தை" என்று பெரியாழ்வாரருளிச் செய்தார். [7]"ஆத்யம் த்ர்யக்ஷரம் ப்ரஹ்ம" [8]"மூன்றெழுத்ததனை" இத்யாதிகளிற்படியே, அநந்தங்களான வேதங்களுக்கும் இம்மந்த்ரந்தனக்கும் மூலமாய், அதறிந்தவனே வேதவித்தென்னும்படி ஸர்வஸாரஸங்க்ரஹமாயிருக்கும் ஏகபதமான இதில் அக்ஷரத்ரயம் நிருக்தவசநத்தாலே தனித்தனியே பதமாய், மூன்றுங்கூட ஒருவாக்யமாகிறது. இந்ந்யாயம் நமஸ்ஸிலும் வரும். இவற்றில் ப்ர

1. தி. பல். 4. 4. வ. பு. கைசிகே. 7. உ. ரா. 11. 65.
2. தி. பல். 11. 5. தி. மொ. 6. 10. 1. 8. பெரி. தி. 4. 7. 10.
3. அ. ஶ்ரு. 1. 57. 6. பெரி. தி. 4. 5. 4.

பா. * ஆசார்யனும் திருமந்த்ரமுமடியாக—வ.
† நாமம் சொல்லில்—இது இல்லை. வ.

[illegible]ம் [1][illegible]யாலே விஷ்ணு[illegible]மென்னுமிடம் [illegible]களாலும் [illegible]ங்களாலும் [illegible]. இது [illegible]ங்களாலே [illegible]. [illegible]ங்களிற்படியே இங்கு முற்பட [illegible]மான காரணத்வம் அறியவேண்டும். 'காரணமே [illegible]ம்' என்று [illegible]மாகையாலே [illegible]த்தைக்கு மிகவும் *[illegible]மான ரக்ஷகத்வமறியவேண்டும். சூரிகருடைய [2]பேறு தன் பேறாக ரக்ஷிக்கு மென்றறிகைக்காக † [illegible]மும் அறியவேண்டும். ஆகையாலே ஸ்ரீய:பதியினுடைய [illegible]காரணத்வமும் [illegible]ரக்ஷகத்வமும் [illegible]மாகிற [illegible]ங்களிங்கே [3][illegible]ங்கள். இவற்றாலே 1 "ஒன்றுந்தேவும்" இத்யாதிகளிற்படியே [4]த்ரிமூர்த்தி[illegible]களுங்கழியும். '[illegible]மான [illegible]ன், [illegible]மான விவக்ஷரத்துக்கு [5] வாச்யன்' என்று 2 "[illegible]" இத்யாதி[illegible]வசனத்திலும் [illegible]த்திலும் [illegible]த்தபடியே இது [illegible]

1[illegible]—இடுகுறிப்பெயர் 2பேறு—லாபம்
3[illegible]ம்—முக்கியமாக சொல்லப்படுபவை.
4த்ரிமூர்த்தி[illegible]—ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளும் ஸமர், அல்லது ஒன்றே, அல்லது இவர்களில் ஸர்வேச்வரனைத் தவிர வேறொருவர் பரம்பொருள் என்பது முதலான பக்ஷங்கள்.
5வாச்யம்—சொல்லப்படும் பொருள் வாசகம்—சொல்.

பா. * [illegible]மாக ரக்ஷகத்வமும்—க. † [illegible]ம்—வ.

1. 4-10. 1. 2. [illegible]

தனைக் காட்டுகிறது. "ஸ்வரக்ஷணே" என்கிற யாதவாபி-
லே [1]ப்ரஸக்தமாய் ரக்ஷகனையுஞ் சொல்லுகிறது.
இந்த ரக்ஷணம் ஸங்கோசமில்லாமையாலே ஸர்வ-
விஷயம். இது ரக்ஷணீயருடைய ஸ்வரூபாதிகளிலும்
நித்யமுக்தர் பக்கலிலும் [2]நிருபாதிகம். மோக்ஷப்ரதா நா-
திகளில் [3]வைஷம்ய நைர்க்ருண்ய ஸர்வமுக்திப்ரஸங்கா-
திகள் வாராமைக்காக, ஸ்வதந்த்ரஸ்ய [4]சோதிதங்க-
ளான [5]வ்யாஜங்களை முன்னிட்டிருக்கும். * ரக்ஷகத்வம்
விரோதியைப்பற்ற, விரோதித்வம் பாரார்த்ய-
த்தைப்பற்ற; இவை மூன்றும் பதத்ரயத்திலடைவே
கண்டுகொள்வது. இவ்வக்ஷரத்திலே [6]தாதர்த்ய சதுர்-
த்தீயேறி லோபித்துக் கிடக்கிறதென்னுமிடம் ப்ரண-
வத்தைக்கொண்டு ஸூதஸ்வைணத்தை விதிக்கிற ஶ்ரு-
த்யாதிகளில் வ்யக்தத்தாலே ஸித்தம். தாதர்த்யமாவது
சேஷத்வம்; அதாவது தனக்கொரு உபகாரத்தை† ப்ரயோ-
ஜனமாகப் பற்றவன்றிக்கே பரோபகாரார்த்தமாகை.
"ஸ்வம் ச" என்று ஸ்வாமி துடர, "அஹம் ச" என்று திமி-
ரப் பண்ணும் அஹங்காரத்தாலே அஸ்வதந்த்ரனானவனை

1 ப்ரஸக்தம்—தோன்றியது.
2 நிருபாதிகம்—ஒரு காரணத்தைப்பற்றி வாராதது.
3 வைஷம்யம்—பக்ஷபாதம், நைர்க்ருண்யம்—இரக்கமின்மை.
4 சோதித—விதிக்கப்பட்ட
5 வ்யாஜம்—அல்பகாரணம்
6 தாதர்த்ய சதுர்த்தீ—மற்றொருவருக்காக என்பதைக் குறிக்கும் நான்காம் வேற்றுமை (உருபு).

பா. * முன்னிட்டிருக்கும் ரக்ஷகத்வம் ரக்ஷகத்வம்—க.
† ப்ரயோஜனமாக—இது இல்லை—க, ப, ம.

ஶேஷத்வஜ்ஞாநம் உஜ்ஜீவிப்பிக்கிறதாகையாலே, அதின் ப்ராதாந்யம் தோற்ற ஸம்பந்தத்தினுடைய விதிநிஷேத த்துக்குப் பொதுவான ஷஷ்டீநிர்தேஶத்துக்கு முன் னே இஶ்ஶேஷத்வம் ப்ரகாஶிதமாயிற்று. இதுக்கு [1]ப்ரதி ஸம்பந்தியான ரக்ஷகனுடைய ஶேஷித்வம் ஸூசிதம். [2]காலாவச்சேதமில்லாமையாலே இதுக்கு [3]அயோகவ்யவ ச்சேதம் ஸித்தம். இத்தாலே ஶரீரஶரீரிபாவமும் ஸூசிக் கும். இங்கு [4]ப்ரக்ருதிப்ரத்யயங்களாலே தோற்றின ரக்ஷகத்வஶேஷித்வங்களுக்கு அஜ்ஞாநது:ஸ்வபாவைலக்ஷண்யை[5] யான லீலாவிபூதியிலும் ப்ரகாஶாதிவைலக்ஷண்யையான நித்யவிபூதியிலும் [6]ப்ராசுர்யேண உபயோகம். ‘காரணபூதன் ரக்ஷகன்’ என்கையாலே விதாவினு டைய ரக்ஷகத்வம்போலே இது [7]விஶ்வஸநீயதமமாம். ‘ஶேஷீ ரக்ஷகன்’ என்கையாலே ப்ரியனான பதி தேவ ரக்ஷணமாப்போலே [8]ஹ்ருத்யதமமுமாம். இக்காரணத்வாதி களுக்கு உபயுக்தங்களாய் ப்ரமாணஸித்தங்களான ஸ ர்வஜ்ஞத்வஸர்வஶக்தித்வாதிகளும், 1 “ருக்ஷ்யா ஸஹ ஹ்ரு

அஸத்கல்பன்—உயிரற்றவன் என்று சொல்லத்தக்கவன்
1ப்ரதிஸம்பந்தி—மற்றொரு எதிரான ஸம்பந்தத்தையுடைய
2காலாவச்சேதம்—காலவரை
3அயோகவ்யவச்சேதம்—ஸம்பந்தம் இல்லாமல் இராமை.
4ப்ரக்ருதி—பகுதி; ப்ரத்யய:—விகுதி [மான
5வைலக்ஷண்யையான—அதிகமான 6ப்ராசுர்யேண—அதிக
7விஶ்வஸநீயதமம்—மிகவும் நம்பத்தக்கது
8ஹ்ருத்யதமம்—மனதுக்குப் பிடித்தது

1. ரு. த. 28-14.

ஷீகேஶ:" 1 "அஸ்யா ஈஶ ச ஶேஷம் ஹி" இத்யாதிகளிற் படியே த்வயத்தில் போலே ஸர்வரக்ஷணதீக்ஷிதனை ஸர்வஶேஷியினுடைய ஸஹதர்மசாரிணீஸம்பந்தமுமிங்கே அநுஸந்தேயம்.

அர்த்தாக்ஷரம் ஶ்ருதிகளில் ப்ரயோகவிஶேஷப்ரஸித்தியாலே [1]அவதாரணார்த்தமாய், கீழ்ச்சொன்ன தாதர்த்யத்தை [2]அந்யயோகவ்யவச்சேதத்தாலே[3] நியமிக்கிறது. 'அகாரவாச்யனை ஶ்ரியப்பதிக்கே நிருபாதிகஶேஷம்' என்றதாயிற்று. இத்தால் ஜீவர்களைப்பற்ற நிருபாதிக ஶேஷத்வம் கழிகையாலே, தேவதாந்தரபாரதந்த்ர்யமும் ஸித்திக்கும். இது ததீயவர்க்கமென்னுமிடம் 2"மற்றுமோர் தெய்வமுளதென்றிருப்பாரோடுற்றிலேன்" என்று காட்டப்பட்டது. இப்படிப்பட்ட அநந்யார்ஹ ஶேஷத்வம் 3"தாஸபூதஶ் ஶரணாகதோஸ்மி, தவாஸ்மி தாஸ இதி வக்தாரம் மாம் தாரய" என்கிறபடியே த்வயத்திலே தோற்றுகிற [4]ஸ்வரூபப்ரதிபத்தியிலும், உபாயபரிக்ரஹத்திலும், புருஷார்த்தப்ரார்த்தனையிலும் [5] அநுஸந்தேயமென்னுமிடத்தை, 4"குலதொல்லடி

1 அவதாரணார்த்தம்—அவனுக்கு மட்டும் என்பதிலிருக்கும் 'மட்டும்' என்னும் பொருளைக் குறிப்பது (பிரிநிலை)
2 அந்யயோகவ்யவச்சேதம்—இதற்கு வேறொன்றோடு சேர்க்கையில்லை என்பது 3 நியமிக்கிறது—நறைத்து நிறுத்துகிறது
4 ஸ்வரூபப்ரதிபத்தி—(ஆத்ம) ஸ்வரூபத்தை அறிதல்
5 அநுஸந்தேயம்—எண்ணப்படவேண்டியது

1. விஷ்வ. ஸம். 2. தி. மொ. 8-10-3.
3 ஶ்ரீரங்க. 4. 6—10—1

யேன்” 1“புகலொன்றில்லாவடியேன்” 2“ஆராவன்பி லடியேன்” என்று ஆழ்வாரருளிச் செய்தார்.

த்ருதீயாக்ஷரம் கீழ்ச் சொன்ன ஶேஷத்வத்தினுடைய ஆஶ்ரயத்தைக் காட்டுகிறது. இத்தை, “உந ஜுஹோதி” “உந ஸமித்ஸ்வாஹா” என்கிற யாதர்க்களிலே [1] நிஷ்பந்நமான பதமென்றும், ஸாதுஶப்தப்ரக்ரியையாலே ஸஸ்வப்தத்திலே [2] ஶேஷமாய் நிற்கிறதென்றும் யோஜிப்பார்கள். இது ஜீவவாசகமென்னுமிடம் [3] ஆத்மஸமர்ப்பணவிதிவாக்யத்தாலே ஸமர்ப்பணீயனான ஆத்மாவுக்கு ப்ரகாஶகமாக [4] பரிஶேஷஸித்தமாகையாலும், ககாரம் முதலாய் மகாரம்* [5] அறுதியான வர்ணங்களை பஞ்சவிம்ஶதி தத்வங்களுக்கு வாசகங்களாக தத்வஸாகர

1 நிஷ்பந்நமான—ஏற்பட்டதான (ரூபத்தை யடைந்த)

2 ஶேஷம்—ஒரு சொல்லில் மறைந்த பாகம் போக, எஞ்சிநிற்பது: (‘அஸ்மத்’ என்னும் பதத்தில் ‘அஸ்’ ‘த்’ என்பது மறைந்து, ‘ம’ மட்டும் நிற்பது).

3 ஆத்மஸமர்ப்பணவிதிவாக்யம்—‘ஆத்மாவை ஸமர்ப்பி’ என்று விதிக்கும் வாக்யம்

4 பரிஶேஷஸித்தம்—பொது அர்த்தம் தெரிந்த ஒரு வாக்கியத்தில் உள்ள மூன்று பதங்களில், இரண்டு பதங்களின் அர்த்தம் தெரிந்தால், மூன்றுவது பதத்தின் அர்த்தம் பரிஶேஷத்தால் ஸித்திக்கிறது. அதாவது இரண்டு பதங்களின் அர்த்தம் போக, மிகுதியிருப்பது மூன்றுவது பதத்தின் அர்த்தம் என்று நிச்சயிப்பது.

5 அறுதியான—வரையிலுள்ள

பா. * இறுதியான—ம. 1. 6—10—10 2. 6—10—2

ஸாக்ஷிதாதிகளிலே சொல்லுகையாலும், 1“ஏகாந்தோ ஜீவ ஹ்ருதந்த:” 2“ஸூத்ரா ஸ ஆத்மா பரவவிதா: ப்ரகீர்த்தித:” என்று விஶேஷிக்கையாலும் ஸித்தம். *இப்படிகளால் இது ஜ்ஞாநஸ்வரூபனாய், ஜ்ஞாநகுணகனாய், இரண்டாகாரத்தாலும் [1]அநுகூலஸ்வரூபனாய், ஸ்வயம்ப்ரகாசனாய், [2]†ப்ரத்யக்காய், தேஹாதிவிலக்ஷணனாய் [3]குணத்ரயாதிரஹிதனாய், அணுவாய், நிரவயவனாய் ஸர்வஶேஷியிற்காட்டில் அத்யந்தாதீநனுமான ஜீவனைச் சொல்லுகிறது. இவ்வசநம் [4]ஜாத்யேகவசநமாய் [5]த்ரிவிதாத்மாக்களையுஞ் சொல்லுகிறதாகவுமாம். 3“அகாரார்த்தாயைவ ஸ்வமஹமத மஹ்யம் ந நிவஹா:” இத்யாதிகளிற்படியே விஶேஷித்துத் தன்னையே காட்டுகிறதாகவுமாம். இப்படி 4“தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே,” 5“ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம்”, 6“ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம்”, 7“தாஸோஹம் வாஸுதேவஸ்ய”, 8“தாஸபூதா வாஸுதேவஸ்ய” இத்யாதிகளிற்படியே தன்னை ஸ்ரிய:பதிக்கு அநந்யார்ஹஶேஷபூதனென்றறியவே, தன்னுடைய

1அநுகூலஸ்வரூபனாய்—ஆநந்தரூபனாய்

2ப்ரத்யக்—(மனக்கண்ணால் பார்க்கவேண்டிய) ஜீவாத்மா

3குணத்ரயம்—ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற (ப்ராக்ருதியின்) மூன்று குணங்கள்

4ஜாத்யேகவசநம்—ஜாதியையே குறிக்கும்படி உபயோகித்த ஒருமை. 5த்ரிவிதாத்மா—பத்தர், முக்தர், நித்யர்.

பா. * இப்படிகளாலும்—க † ப்ரத்யகாத்மாவாய்—க.

1 2 பாஞ்சராத்ர. 4-27. 3 அஷ்ட. 3

4 ஶ்ரு. ஸ்தோ. 10 5 வி. த. 6

7 இ. ஸ. 33-125 8

ப்ராணவிரஹாதிகளிலும் இவ்விசேஷணம் [1] கைமுதிக ந்யாயத்தாலே ஸித்திக்கிறது. இது [2] உபலக்ஷணமாகவுமாம். இங்கே 1 "ஸகாரணாய விஷ்ணவே" என்கிற ச்லோகத்தைப்படிப்பது. ஸ்ம்ருதியில் சொன்ன யோஜநாந்தரத்தில் சதுர்த்யக்ஷரம் ரக்ஷ்யவாசகமாய் மத்யமாக்ஷரத்தோடு ஸமஸ்தமாகிறது. அப்போது [3] ஸாவதாரணம் [4] ஸாமர்த்ய ஸித்தம். ஒரு பதத்துக்கு வ்ருத்தி பேதத்தாலே ஸாமர்த்ய பேதஞ் சொல்லுகை ச்ருத்யாதிகளிலே ப்ரஸித்தம். 2 "ஸக்ருதேவ ப்ரபந்நாய" என்கிற ச்லோகத்திலே வ்ருத்தர்கள் வார்த்தையை இங்கே அநுஸந்திப்பது. 3 "ஸ நாய" என்கிற ச்லோகத்திலும் இதில் அக்ஷரார்த்த வாக்யார்த்தங்கள் நிற்கிற நிலையைக் கண்டுகொள்வது.

காரணமுங் காவலனு மாகி யென்றுங்
  கமலையுடன் பிரியாத நாதனை
நாரணனுக் கடியேனு னடிமை பூண்ட
  நல்லடியார்க்கல்லால் மற்றொருவர்க்கல்லேன்

1 கைமுதிகந்யாயம்—(சிறியவனே ஒரு காரியத்தைச் செய்யக் கூடும் என்றால், பெரியவன் அதைச் செய்ய முடியும் என்பதை) கூறவும் வேண்டுமோ என்று சொல்லும் நியாயம்

2 உபலக்ஷணம்—(ஒன்றைச் சொன்னதினாலேயே) மற்றுள்ளவற்றையும் சேர்த்துக்கொள்ளுவது

3 ஸாவதாரணம்—பிரிநிலை (சொல்லின் பொருளை மட்டுப்படுத்தும் [சொல்

4 ஸாமர்த்யஸித்தம்—(வெளியிட்டு சொல்லாவிட்டாலும்) ஸந்தர்ப்பத்தினால் ஸித்திப்பது

1 அஷ்ட. 1   2 ரா. ஸு. 11 1.   3 ஷெ. ர. 53.

ஆரணங்கள் கொண்டகமும் புறமும் கண்டா
லறிவாகி யறிவதுமா யறுநான்கன்றிச்
சீரணிந்த சுடர்போலத் திகழ்ந்து நின்றேன்
சிலைவிசயன் தேரணையச் சிறுவேதத்தே. உ

வாக்யங்களுக்கு அவதாரணத்திலே தாத்பர்யங்கொள்ள உசிதமாகையாலே, ப்ரணவத்தில் அவதாரணத்தோடே துவக்கி உபாயமும் உசிக்கிறது. 1 "நம ஐதேவ வாசிநம்." 2 "நம ஐதேவ யோ ஸ்த்ரீயாஸ" என்று விசேஷித்து ஸூசரணீயமான இப்பதத்துக்கு 'ஸூத்ரம்' 'ஸக்ஷும்' 'பரம்' என்று அர்த்தபேதங்கள் ஸம்ப்ரதாய நிருக்தங்களிலே சொல்லப்பட்டன. இவற்றில் ஸக்ஷுயோஜனை விரோதிஜ்ஞானத்துக்கும், *அநிஷ்டநிவ்ருத்திப்ராப்தனைக்கும், பரதத்த்வஸ்வ 1 நிஷ்கர்ஷத்துக்கும், ஸாமவதமோக்ஷஸ்வருதிவத்திக்கும், †உபாயவிமோக்ஷஸித்திக்கும், 2உபயுக்தமாகையாலே, இத்தை விமோஷித்து ஆசார்யர்கள் அநுஸந்திப்பார்கள். இந்நமஸ் 'ந' என்றும், 'ம:' என்றும் இரண்டு பதமாய் ஒரு வாக்யமாகிறது. கீழ்மேலுள்ள விரோதிகள் 3 பரிஹரணீயங்களென்று தோற்றுகைக்காக, 4 நிஷே

1 நிஷ்கர்ஷம்—நிச்சயம் 2 உபயுக்தம்—உபயோகமானது
3 பரிஹரணீயம்—விலக்கவேண்டியவை
4 நிஷேத்யம—இல்லை என்று சொல்லப்படும் பொருள்

1. நாராயணீயெ. ஸாந். மோ. 344-45. 2.
* அநிஷ்டநிவ்ருத்திஷ்—வ.
† உபாய ...ஸித்திக்கும்—இது இல்லை வ.

யத்துக்கு முன்னே நிஷேதவாசியான மகாரம் கிடக்கிறது. 'ஆய' என்கிற விது கீழ்ச்சொன்ன ப்ரகாரங்களாலே ஜீவவாசியான அக்ஷரத்திலே ஷஷ்ட்யேகவசநமாய், 'எனக்கு' என்கிறது. [1] இவ்வபிமாநம் இத்தை முதலாகக்கொண்டு வரும் விரோதிவர்க்கங்கள் எல்லாத்துக்கும் உபலக்ஷணம். விரோதிநிவ்ருத்திப்ராப்யத்துக்காக இவ்விரோதிஜ்ஞாநமும் அபேக்ஷிதம். இங்கே த்ருதீயாக்ஷரத்தை [2]அநுஷங்கித்து அந்வயிப்பது. 1 "அஹம் மம" என்று அநாதியாக ப்ரமித்தவன், இப்போது 2 "ஆத்மதாஸ்ய ந மம" என்கிறான். இத்தை 3 "அஹம் ந மம" * என்றார்கள். [3] ஸாமாந்யஸம்பந்தஷஷ்டி இங்கு தாஸ்யத்தை [4]விவக்ஷிக்கிறது என்று தாத்பர்யம். தன்னைப்பற்ற தனக்கு நிஷேத்யமான தாஸ்யமும் † ஸ்வகாரஸ்வாதந்த்ர்யாலே வருகையால் [5]ஸ்வாத்மாஶ்ரயதோஷமில்லை. தான் தனக்குப் பண்ணிக்கொள்ளும் [6] அதிஶயமும் வராதென்று அநுஸந்திக்கை

1அபிமாநம்—'நான்' என்பது போன்ற எண்ணம்
2அநுஷங்கித்து—(கீழ் வாக்யத்தில் இருப்பதை) சேர்த்து
3ஸாமாந்யஸம்பந்தஷஷ்டீ—இருவருக்குள்ள ஸம்பந்தத்தை இவ்வித ஸம்பந்தம் என்று குறித்துச் சொல்லாமல், பொதுவிலே சொல்லும் ஆறும் வேற்றுமை
4விவக்ஷிக்கிறது—சொல்ல விரும்புகிறது
5ஸ்வாத்மாஶ்ரயம்—தனக்குத் தானே ஆதாரமாயிருக்கல்
6அதிஶயம்—மேன்மை

1. ஷட்டர் ஸ்மத்ககம். 2. ஸாத். ஸா.25-19
3. அஷ்டஶ்லோ 1. § ஜ்ஞாநமும்—க
* என்கிறார்கள்—க. † அஹங்கார—க. வ. ம.

க்காக இங்கு 'தான் தனக்கு ஶேஷமல்லன்' என்கிறது. தான் தனக்குரியனல்லனானால், தனக்கு வேறொன்றையும் பற்ற நிரூபாதிக ¶ஶேஷித்வமில்லையாம். இது தன்னையே இங்கு சொல்லுகிறதாகவுமாம். அப்போது 'கிஞ்சி' என்று ஒரு பதத்தை [1]அத்யாஹரித்து, 'ந மம கிஞ்சி' என்று ஒரு வாக்கியமுமாம். இது தன்னாலே தன்னையும் தன்னுடைமையையும் * சேரத் தன்னோடு [2]துவக்கறுக்கிறானாகவுமாம். இத்தால், 1 "யானே யென் தனதே யென்றிருந்தேன்" என்கிற ஸம்ஸாரத்வங்கள் [3]வ்யாவ்ருத்திக்கப்படுகின்றன. கீழ் [4]ஸாமாந்யேந ஸ்வ ஶேஷித்வங்கழிந்திருக்க, [5]கோபலீவர்த்த ந்யாயத்தாலே இங்கு விஶேஷிக்கிறது. [6]ஸ்த்ரீகரணார்த்தமாகவுமாம். இவ்வர்த்தங்களை கீழே ஸித்தமாக்கி, 2 "என்னான் செய்கேன்" இத்யாதிகளிற்படியே ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியை

1அத்யாஹரித்து— (இல்லாத பதத்தை) சேர்த்து 2துவக்கு—[ஸம்பந்தம்
3வ்யாவ்ருத்திக்கப்படுகின்றன—அறுக்கப்படுகின்றன
4ஸாமாந்யேந—(குறிப்பிடாமல்) பொதுவிலே
5கோபலீவர்த்த ந்யாயம்–'மாடுகளைக் கொண்டுவா, காளை மாட்டையும் கொண்டுவா' என்பது. 'மாடுகள்' என்றதினாலேயே, காளையும் சொல்லப்பட்டதாக ஆனாலும், அதில் ஓராதரவு தோற்ற அதைப்பிரித்து சொல்வதால் 'மாடுகள்' என்பதில் காளைமாடு தவிர மற்றவையே குறிக்கப்படும் என்பது.
6ஸ்த்ரீகரணார்த்தம்—உறுதிப்படுத்தலின் பொருட்டு

¶ ஶேஷத்வம்—க; ஸ்வாமித்வம்—வ, † ஸம்பந்தம்—வ.
* சேர்த்து—ம † ஸம்பந்தம்—வ
1. 2-9-9 2. 5-8-3.

